

நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு

அம்பிகா ஜுவலர்ஸ்

77, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6571 1990 ஏப்ரல் 24 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238


# ஊழியர்களுக்கு அரசு மே தினப் பரிசு வழங்கும்

## வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்கச் சம்பள உயர்வுபற்றி ஆலோசனை

கொழும்பு, ஏப். 23

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப ஊழியர்களுக்கு சம்பள உயர்வும் மற்றும் பல சலுகைகளும் மே தினப் பரிசாக வழங்குவதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

உயர்மட்ட மாநாடொன்றில் இந்த விடயம் ஆராயப்பட்டு சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பள உயர்வு ஊழியர்களுக்கான மே தின பரிசாக இருக்கும்.

கொழும்பு காலிமுகத் திடலில் நடைபெறவிருக்கும் ஐ தே க மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச அரசின் மேதினப் பரிசு பற்றி அறிவிப்பார் என்று நம்பப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு வழங்க வேண்டும் என தமது தொழிற்சங்கம் மே தினத்தன்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவிருப்பதாக தேசிய சேவையாளர் சங்கத்தின் தலைவர் திரு நெவில் பெரேரா தெரிவித்தார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 200 ரூபா சம்பள அதிகரிப்பு சிபார்சு செய்யப்பட்டது.

இந்த சம்பள அதிகரிப்பு பல தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை.

இது விடயமாகவும் தமது சங்கம் மே தினத்தில் குரல் எழுப்ப விருப்பதாக திரு பெரேரா தெரிவித்தார்.

[உ—ற]

## கடலில் [illegible]வர் இருவர் மின்னல் தாக்கி மரணம்

## சோமண்ணை



வழமையான மே தினக் கோஷத்தை விட பரிசு வித்தியாசமானதுதான் பாருங்கோ,

## அரச ஊழியர்கள் பற்றி மதிப்பீடு

கொழும்பு, ஏப் 23

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க மற்றும் அரச சார்பான நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்கள் குறிக்க [illegible] இறுதிக்குள் மதிப்பீடு ஒன்று நடத்தப்படும்.

குடிசன, புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம் இந்த மதிப்பீட்டை நடத்தும்.

1968 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடளாவிய ரீதியில் இவ்வாறு மதிப்பீடு நடத்தப்பட்டு வருகிறது.

எனினும் கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் நிலவிய பதற்ற நிலை காரணமாக மதிப்பீடுகள் நடத்தப்படவில்லை.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னதாக தமது கீழ் கடமை புரியும் ஊழியர்கள் தொடர்பான விவரங்களை தந்து உதவுமாறு நேரடி திணைக்களத் தலைவர்கள், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச சார்பான நிறுவன உயர் அதிகாரிகளை கேட்டுள்ளது.

(ண—ர)

## சாராய கடத்தல் லொறி பொலிஸ் கைப்பற்றியது

கொழும்பு, ஏப் 23

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கள்ளத்தனமாக சாராயத்தை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை மதவாச்சி பொலீஸார் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றினர்.

எவ்வித அனுமதிப் பத்திரமும் இன்றி 340 சாராய போத்தல்களை ஏற்றிச் சென்ற லொறியின் சாரதி உட்பட மூவரை பொலீஸார் கைது செய்தனர்.

சாராய போத்தல்களுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "பிராந்தி" போத்தல்கள் அடங்கிய 15 பெட்டிகளும் மேற்படி லொறியில் காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட இந்தச் சாராயம் பரிசோதனைக்காக கலால் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மதவாச்சி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு [illegible] சி பெரேரா தெரிவித்தார்.

(ண—வ)

## நாடாளுமன்றம் இன்று கூடும்

நாடாளுமன்றம் இன்று காலை 9 மணிக்கு கூடும்.

தேசிய இறைவரி சட்டம் மீதான விவாதமும், 1989 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவு உச்சவரம்புகளில மாற்றம் கொண்டு வருவது தொடர்

[2ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. அதிகாரிகள் வடமராட்சி விஜயம்

யாழ்ப்பாணம், ஏப் 22

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் நேற்றுத் திங்கட்கிழமை வடமாராட்சிப் பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு அன்டன் அல்பிரட் இக் குழுவினரை அங்கு அழைத்துச் சென்றார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரி திரு றொபட் (லண்டன்), திரு சொக்ஹன்பீட்டர் உலக வங்கி அதிகாரி

[2ஆம் பக்கம் பார்க்க]

## புத்தளத்தில் நடந்த ஊர்வலம்

கொழும்பு, ஏப் 23

பைத்துல் முகத்தஸ் மீட்பு தினத்தையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் நகரில் நடந்த ஊர்வலத்தில் ஆண்களும் சிறுவர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

பல கோஷங்களை எழுப்பிய வண்ணம் அவர்கள் சென்றார்கள்.

ஊர்வலத்தில் பெண்களும் சிறுமிகளும் கலந்து கொள்ளவில்லை.

கடந்த சனிக்கிழமை ஊர்வலம் பற்றி வெளியிட்ட செய்தியில் தற்செயலாகத் தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.

(உ)

## முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டம்

கொழும்பு, ஏப் 23

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் வெள்ளி விழா தொடர்பாக முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு ஐந்தாண்டு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

புனித "லைலத்துல் கத்ர்" இரவில் இந்தத் திட்டத்தின் அங்குரார்ப்பண விழா நடைபெற்றது.

அங்குரார்ப்பண விழாவை முன்னிட்டு நேற்றிரவு தொலைக்காட்சியிலும் வானொலியிலும் விசேட நிகழ்ச்சிகளும் ஒலி, ஒளிபரப்பு செய்யப்பட்டன.

நோன்பு

ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவு உச்சவரம்புகளில மாற்றம் கொண்டு வருவது தொடர்

[2ஆம பக்கம் பார்க்க]

...களை ஏற்றிச் சென்ற லொறியின் சாரதி உட்பட மூவரை பொலீஸார் கைது செய்தனர்—

சாராய போத்தல்களுடன் ...

...அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மதவாச்சி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு ... பெரேரா தெரிவித்தார்— (ண—வ)

# கடலில் ம... வர் இருவர் மின்னல் தாக்கி மரணம்

கொழும்பு, ஏப் 23

அடைமழையையும பொருட்படுத்தாது கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இளம மீனவர்கள் இருவர் மின்னல் தாக்கி மரணமானார்கள், அவர்கள் சென்ற மீன்பிடிப் படகு சேதமடைந்தது—

சிலாபம, தொடுவாவ மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ரோஹண சமன் (வயது 25), சந்தன கிரிஷாந்த (வயது 15) ஆகியோரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவர்கள்—

சிலாபம திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப் கே ஏ லத்தீப் கான் முன்னிலையில் இவர்கள் இருவரது மரண விசாரணையும நடைபெற்றது—

மின்னல் தாக்கியதால் ஏற்பட்ட திடீர் விபத்து மரணம என விசாரணைகளின் முடிவில் தீர்ப்பு வழங்கப்பட்டது—

ஆஸ்பத்திரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு சுரேந்திரன் சாட்சிகளை நெறிப்படுத்தினார்—

(ண—வ)

# சிறிய மின் உபகரணங்கள் உள்நாட்டில் உருவாகும்

கொழும்பு, ஏப் 23

இலங்கை மின்சார சபை சிறிய அளவிலான மின் உபகரணங்களை உள் நாட்டிலேயே தயாரிக்கும—

இதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டு வருகிறது—

சிறிய அளவிலான மின் உபகரணங்கள் இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன—

இவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக உள்ளூர் தொழில் நுட்பவியலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும—

ஜனசக்தி உதவி பெறுவோருக்கு இத்திட்டத்தின் கீழ் சுய

[2ஆம பக்கம் பார்க்க]

# நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4–24 |
| சுபஹ் | 4–39 |
| சூரிய உதயம | 5–59 |
| ளுஹர் | 12–20 |
| அஸர் | 3–22 |
| மஃரிபு | 6–18 |
| இஷா | 7–38 |

அங்குரார்ப்பண விழாவை முன்னிட்டு நேற்றிரவு தொலைக்காட்சியிலும வானொலியிலும விசேட நிகழ்ச்சிகளும ஒலி, ஒளிபரப்பு செய்யப்பட்டன.

அநுபந்தம உள்ளே

முஸ்லிம கல்வி வளர்ச்சிக்கான திட்ட அங்குரார்ப்பணத்தை புனிதமிக்க ஓர் இரவில் நடத்தியதன் மூலம நமது இலக்குகள் யாவும இனிதே நிறைவேற அல்லாஹுத்தஆலா அருள்பாலிக்க வேண்டும.

முழு முஸ்லிம சமுதாயமும

[6ஆம் பக்கம பார்க்க]





அன்னை பூபதி எழுச்சி தினத்தையொட்டியும, இந்தியப் படை வடக்கு, கிழக்கில் நிலை கொண்ட காலத்தில் புரிந்த அழிவுகள், அட்டூழியங்கள் ஆகியனவற்றை காட்டும முகமாகவும கடந்த வியாழக்கிழமை உப்புவெளியில் இருந்து புறப்பட்ட எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதியினர் அணிவகுத்து வருவதை இடது பக்க படத்தில் காண்கிறீர்கள்—

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கடந்த புதன் கிழமை மாலை திருகோணமலை முற்றவெளி திறந்த அரங்கில் பொதுக் கூட்டம ஒன்றை நடத்தியது— மேடையில் மக்கள் முன்னணித் தலைவர் திரு மாத்தயா, கவிஞர் காசி ஆனந்தன், திருமலை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு பதுமன், அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன் மாதர் முன்னணியைச் சேர்ந்த சுந்தரி, கீத்தா ஆகியோர் அமர்ந்திருப்பதை நடுவிலுள்ள படத்தில் காண்கிறீர்கள்— கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினரை வலது பக்கப் படத்தில் காணலாம—

(ண—287)

[படங்கள்— நவரத்தினம]

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# நைஜீரிய சதி முயற்சி முறியடிப்பு

## இராணுவ தளபதிகள் -வீரர்கள் பலர் கைது

லாகோஸ், ஏப். 23

நைஜீரிய ஜனாதிபதி இப்ராஹிம் பாபன்கிடாவின் ஆட்சியைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட இராணுவ சதி முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டது. இராணுவ தளபதிகள் பல ருடன் இராணுவ வீரர்கள் பலரும் கைதாகியிருக்கின் றனர்.

சதி முயற்சி தோல்வி கண்டதன் பின் இரும்பு மனிதனும ஜனாதிபதியுமான இப்றாகிம பாபங்கிடா அமைதியாக உள் நாட்டுப் பத்திரிகையாளர்களுடன் காணப்பட்டார். தேசிய தொலைக்காட்சி இதை பற்றி ஒளிபரப்பியது-

கூட்டு இராணுவ பிரதானிகளின் தலைவரான சனி அபாச்சா சதி முறியடிக்கப்பட்டதை அடுத்து வானொலியில் அறிவித்தார்-

இச்சதிப் புரட்சிக்கு சில வழிதவறிய இராணுவ உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருந்துள்ளனர்-

அரசாங்கத்தின் நமபிக்கைக்குப் பாத்திரமான துருப்புகள் கடும மோதலின் பின் சதியை வழிநடத்தியவர்களைக் கைது செய்தனர்- ஆயுதங்களுடன் ஏனையோர் சரணடைய வேண்டும என சனி அபாச்சா உத்தரவிட்டிருக்கிறார்-

1985ஆம் ஆண்டு எமக்கு எதிராக இத்தகைய சதி ஒன்று நடந்தது- அதில் சமபந்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்ததோ அதையே இப்போது செய்வோம பிடிப்பட்டார்கள் விசாரிக்கப்படுவார்கள் என்றார் ஜனாதிபதி-

1985 இல் நடந்த புரட்சியில் 10 இராணுவ அதிகாரிகள் சதி காரணமாக மரண தண்டனை பெற்றனர்- ஞாயிறன்று வெற்றிகரமாகத் தொடங்கி வானொலி நிலையம ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றில் இடிபாடுகளை ஏற்படுத்திய புரட்சியாளர்கள் இறுதியில் வீழ்ச்சியடைந்தனர்-

சதிப் புரட்சியில் ஈடுபட்டவர்கள், தாம நைஜீரியாவின் 21 மாநில கூட்டாட்சியில் 5 மாநிலங்களைக் கைப்பற்ற முயன்றதாகச் சொன்னார்கள்- தாம முஸ்லிம அல்லாதவர்களின் பிரதிநிதிகள் என்றும கூறினர்- ஜனாதிபதியின் தவறான பொருளாதாரக் கொள்கை மக்களை வாட்டுகின்றது என்றனர்- எண்ணெய் வள நாடுகளில் ஏற்பட்ட விலைக் குறைப்பால் நைஜீரியா பாதிக்கப்பட்டிருக்கிறது தெரிந்ததே! ஆனால் எந்த எதிர்ப்புக்கும அஞ்சாமல் தம அரசு தனது ஜனநாயகக் கொள்கையைக் கடைப்பிடிக்கும என்கிறார் இராணுவப் பிரதானிகள் தலைவர் சனி அப்பாச்சா-

வெளிநாட்டுச் செலாவணி குறைந்தால் நைஜீரியா தனது கடன்களைத் தீர்க்க முடியாமல் திணறுகிறது- இதே நேரம சர்வகலாசாலை மாணவர்களும் இராணுவ தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியை எதிர்க்கின்றனர்-

நடந்த இப்புரட்சியில் ஜனாதிபதியின் மெய்க்காப்பாளர் கொல்லப்பட்டார்- பின்னர் நடந்த சடும மோதலின் பின் புரட்சியாளர் பின்வாங்கினர்- மக்கள் இதனையடுத்து ஆனந்தமாக ஆடிப்பாடினர்-

[எ—ரி]

## உலகச் செய்திகள்

### மேற்கு நாடுகள் உதவி

கொபன்ஹேகன் ஏப் 23

லிதுவேனியா மீது பொருளாதார தடை கொண்டு வரப்பட்டால் அதனை சமாளிக்க மேற்கு நாடுகள் உதவி வழங்கியிருப்பதாக அறிவிக்கப் படுகிறது-

இதுபற்றி லிதுவேனிய பிரதமர் கஸிமெய்ரா புருன்ஸ்கீன் கூறினார்-

ஒஸ்லோ - உதவி வழங்க எடுத்திருக்கும முடிவு பற்றி தனக்கு தொலைபேசி மூலம அறிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்-

[எ]

### இந்தியதுணிவகை பொலீஸார் கைப்பற்றினர்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும பெருந்தொகையான வேஷ்டிகளையும மற்றும பொப்லின் துணி வகைகளையும ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை மதவாச்சி பொலீஸார் கடந்த சனி இரவு கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட வேஷ்டி மற்றும துணிகளின் பெறுமதி 75 ஆயிரம ரூபாவாகும என அவர்கள் தெரிவித்தனர்.

இச்சமபவம தொடர்பாக மதவாச்சி பொலீஸார் மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ண-வ)

கடமையாற்றும் போது

### உயிர் நீத்த பாது.படையினர் குடும்பத்தனருக்கு உபசரணைநிகழ்ச்சி வீர செபல நிறுவனம் நடத்தியது

கொழும்பு, ஏப் 23

பாதுகாப்புப் பணிகளின் போது உயிர்நீத்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும பத்தினருக்காக வீர செபல நிறுவனம கடந்த வாரம பல்வேறு உபசரணை நிகழ்ச் சிகளை நடத்தியது.

தமிழ் சிஙகள புத்தாண்டை முன்னிட்டே இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நாட்டின் பாதுகாப்புக்காக உயிர்த் தியாகம செய்த பொலீஸ் மற்றும பாதுகாப்புப் படை வீரர்களுக்கு தேசத்தின் கௌரவத்தை வழங்கவே வீர செபல நிறுவனம ஆரமபிகப் பட்டது-

அவ்வாறு உயிர்நீத்த பொலீஸ் மற்றும பாதுகாப்பு படை வீரர்களின் உறவினர்கள் கடந்த சனிக்கிழமை தெஹிவளை எஸ் டி எஸ் ஜயசிங்க மண்டபத் திற்கு அழைக்கப்பட்டனர்.

அங்கு அவர்களுக்காக காலை விருந்து வழங்கப்பட்டது.

பின்னர் அவர்கள் மிருகக் காட்சிசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுக்காகவே யானை நடனம மற்றும ஏனைய காட்சிகள் நடத்தப்பட்டன, பகல் உணவு அஙகேயே வழங்கப் பட்டது,

இறந்த வீரர்களின் பிள்ளைகளுக்கு வீர செபல நிறுவனத் தினர் அன்பளிப்புகளை வழங்கினர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலை பிரதி பொலீஸ் மா அதிபர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரிய, மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, கடற்படை கொமடோர் எம எல் மெண்டிஸ், எயர் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தன ஆகியோரும இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

வீரசெபல நிறுவனத்தின் தலைவர் டாக்டர் நந்ததாச கோதாகொடவும சமுகமளித்து இருந்தார்.

(ந-ற)

## இன்றைய திரைகளில்

2 வது வாரம

ஜெஸிமா
[கிராண்ட்பாஸ்]
2-30, 6-00, 9-30

ரியோ
[கொமபனித்தெரு]
(குளிரூட்டப்பட்டது)
திஙகள் முதல் வியாழன் வரை,
காட்சி நேரஙகள்
2-15, 6-15 மணி
சனி/ஞாயிறு
10-15, 2-15, 6-00, 9-00

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

சுவர் இல்லாத சித்திரஙகள்,
புதிய வார்ப்புக்கள்
மௌனகீதஙகள் புகழ்
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

இது நம்ம ஆளு

[கவர்]

3 வது வாரம

சமந்தா
(தெமட்டகொட)
10-30, 2-30, 6-00, 9-00

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

10 வருஷத்துக்கு முன்பு

தனியார் பஸ்

### மேலதிக பயணிகள் உச்சவரம்பு நீக்கம்

கொழும்பு, ஏப் 23

மேல் மாகாண சபை எல்லைக்குள் தனியார் பஸ்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையை விட கூடுதலான பிரயாணிகளை ஏற்றிச் செல்வது தொடர்பான தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு ஆர் பிரேம தாசவின் பணிப்புரையின் பேரி

இதனால் மக்கள் பெரும எண்ணிக்கையில் வீதிகளில் வாகனஙகளுக்காக காத்திருக்கும நிலை ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக நான் போக்குவரத்துத்துறையில் ஈடுபாடுள்ள பலருடன் ஜனாதிபதியை சந்தித்து பல ஆலோசனைகளைத் தெரிவித்தேன்.

இதனை அடுத்தே ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை விடுத்

மத்திய மா. சபை

### இன்று கூட்டம்

கண்டி, ஏப் 22

மத்திய மாகாண சபையின் இரண்டாவது தொடர் கூட்டம் வைபவ ரீதியாக இன்று 24 ஆம திகதி ஆரமபித்து வைக்கப்படும-

கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்ட இந்த வைபவத்தில் மத்திய மாகாண ஆளுநர் திரு பீ வி இமபுலான நிகழ்த்துவார்-

இதனையொட்டி கண்டி ஆளுநர் வாசஸ்தலத்தில் இருந்த

## இளைஞர்கள் வன்முறையை கைவிட்டு சரணடைய வேண்டும்

### சுயாதீன சரணடைதல் குழு அறிக்கை

கொழும்பு, ஏப் 23

இளைஞர் அமைதியின்மையோடு எவ்வகையேனும தொடர்பு கொண்டிருந்த இளைஞர்கள் வன்முறைகளைக் கைவிட்டு பிரதான தேசிய நீரோட்டத்தில் சேர வேண்டும, சுயாதீன சரணடைதல் குழுவிடம வந்து சரண் அடைய வேண்டும.

இப்படி வேண்டுகோள் விடுக்கும அறிக்கை ஒன்றை சுயாதீன சரணடைதல் குழுவின் செயலாளர் திரு லால் குருகுல சூரியா வெளியிட்டிருக்கிறார். அதில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

அண்மைக்காலம வரை தாமே முன்வந்து சரணடைய முயலாதிருந்த இளைஞர்கள் இப்போது ஆரமபிக்கப்பட்டிருக்கும சரணடைதல் குழுவிடம சரணடையலாம.

திருமலை மாவட்ட

காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் பணிப்புரையின் பேரிலேயே இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது– நாட்டின் வாகனப் பயணிகளில் 50 சத வீதத்தினர் மேல் மாகாண சபை பிரதேசத்திற்குள்ளேயே பயணம் செய்கிறார்கள்.

ஆனால் பொதுப் போக்குவரத்து சாதனங்களில் 50 சத வீதம் இந்த மாகாணத்திற்குள் இயங்குவதில்லை.

பதியை சந்தித்து பல ஆலோசனைகளைத் தெரிவித்தேன்.

இதனை அடுத்தே ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

தனியார் பஸ்களில் ஆசனங்களில் அமர்ந்து செல்லும் பயணிகளுக்கு புறம்பாக, ஆசனங்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு சமமான எண்ணிக்கையில் பயணிகள் நின்று கொண்டு பயணம் செய்யலாம்.

இந்த உச்சவரம்பு தற்போது மேல் மாகாணத்தில் நீக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அவர் கூறினார்.

(ண–ற)

இ[illegible]புலான நிகழ்த்துவார்–

இதனையொட்டி கண்டி அஞர் [illegible]சஸ்தலத்தில் இருந்து பொலீஸ் படையினர் அணி வகுக்க குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தை வந்தடைவர்– காலை 10 மணிக்கு [illegible] இந்த [illegible]வத்தில் பொலீஸ் அணி வகுப்பு மரியாதையை [illegible] அஞர். முதலமைச்சர் [illegible] மத்திய பிரதேச பிரதி பொலீஸ் மா அதிபர் திரு [illegible]தாஸ [illegible]. கண்டி சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு பீ [illegible] லியனகே ஆகியோரும் ஏற்றுக் கொள்வார்–

(ண–017)

# ஐ. நா. அதிகாரி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனோகுளான் மறுவாழ்வு அதிகாரி திரு எஸ் சிவானந்தன் ஆகியோர் இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்–

வல்வெட்டித் துறை, பருத்தித் துறை ஆகிய பிரதேசங்களின் பிரஜைகள் குழுவினரும் இந்த அதிகாரிகளை சந்தித்து நிலைமைகளை விளக்கினர்–

கோப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக இவர்கள் பரிசீலனை செய்தனர்–

வல்வெட்டித்துறை, பருத்தித் துறை ஆகிய பிரிவுகளின் உதவி அரசாங்க அதிபர்கள் இத்திட்டம் தொடர்பாக அதிகாரிகளுக்கு விவரங்களைச் சமர்ப்பித்தனர்–

தெல்லிப்பளை யாழ் மாவட்ட [illegible] வாழ்வு [illegible] அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான [illegible] ஒன்றையும், அரசாங்க அதிபர் கூட்டியுள்ளார்–

[illegible] எல்லா [illegible] களை [illegible] அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்–

(ண–யு–120)

# பொலீஸ் வலையில் 35 காதல் ஜோடிகள்

கொழும்பு, ஏப். 23

சமூகக் கேடுகளைக் களையும் வகையில் நுகேகொடை பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட 35க்கும் அதிகமான காதல் ஜோடியினர் சிக்கினர்.

மேலும் பல சட்ட விரோதிகள் மடக்கப்பட்டதோடு பெருமளவு கள்ளச் சாராயமும் இவ்வேட்டையில் சிக்கியது.

மஹரகமை ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட முற்றுகையில் 16 ஜோடியினர் பொலீஸாரிடம் சிக்கினர். மாஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தப்பட்ட இவர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மிரிஹானை, தலங்கமை, ஹோமாகமை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட முற்றுகைகளில் மேலும் 21 காதல் ஜோடியினர் சிக்கினர்.

ஹோமகமையில் 200 பீப்பாய் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இப்பகுதிகளில் நீண்ட காலமாக சமூக ஒழுங்கீனங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததினால் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்ற பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்தே பொலீஸார் இச் சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நுகேகொடை பொலீஸ் அதிபர் ஹென்றி பெரேராவின் பணிப்பின் பேரில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ண–032)

# நாடாளுமன்றம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான 21 பிரேரணைகளும் இன்றைய சபை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தச் செலவு உச்சவரம்பு மாற்றம் தொடர்பான பிரேரணைகளை பிரதமர் திரு டீ பி விஜேதுங்க சபையில் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

(ண–ற)

களைக் கைவிட்டு பிரதான ... இப்படி வேண்டுகோள் விடுத்

## திருமலை மாவட்ட

# கிராம மக்களுடன் மாத்தயா கலந்துரையாடல்

தம்பலகாமம், ஏப் 22

திருகோணமலைக்கு விஜயம் செய்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு மாத்தயா மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து கலந்துரையாடினார்–

திரு மாத்தயாவுடன் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் திரு பதுமன், அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன், மகளிர் அணித் தலைவி சுந்தரி, மற்றும் கீதா ஆகியோரும் சென்றிருந்தனர்–

சென்ற இடமெல்லாம் மக்கள் பெரும் திரளாக நின்று மாலைகள் அணிவித்து மலர் தூவி அவர்களை வரவேற்றனர்–

புல்மோட்டையில் மக்கள் கோலாட்டம் ஆடி வரவேற்றனர்–

கிண்ணியா, ஆலங்கேணி, மூதூர், குச்சவெளி, திரியாய் போன்ற கிராமங்களுக்கும் சென்று அவர்கள் கூட்டங்களை நடத்தினர்–

[ந—288]

# தேடுதலில் தீவிரவாத சந்தேக நபர் கைது

கொழும்பு, ஏப் 23

பதுளை மாவட்டத்தில் பொலீஸார் நடத்திய தேடுதலில் தீவிரவாத சந்தேக நபரான எம சுமதிபால அல்லது சுமதி என்பவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

அரசு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருக்கும் மேலும் பல சம்பவங்கள் வருமாறு:

பொலன்னறுவையில் பாதுகாப்பு படையினர் தேடுதலை நடத்தினர்.

ஒளிவிடமொன்றில் பலரகப்பட்ட துப்பாக்கிகளையும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளையும் அவர்கள் கைப்பற்றினர்.

அம்பாந்தோட்டையில் துப்பாக்கியொன்றை பாதுகாப்பு படையினர் கண்டெடுத்தனர்.

மொனராகலையில் இனம் தெரியாத நபர்கள் 18 வயதுள்ள எஸ் ஜே ஏ பிரேமரத்ன என்பவரை கத்தியால் குத்தி கொன்றனர்.

புத்தளையில் இனம் தெரியாத துப்பாக்கி மனிதன் 34 வயதுள்ள எல் ஏ விமால் என்பவரை சுட்டுக் கொன்றனர்.

இது ஒரு தீவிரவாத செயல் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

(ந–455)

இயலாதிருந்த [illegible] இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சரணடைதல் குழுவிடம் சரணடையலாம்.

அல்லது இக்குழுவின் உறுப்பினர்களான தனிப்பட்ட அங்கத்தவர் ஒருவரிடம் அல்லது பல்வேறு மாவட்டங்களில் நிறுவப்பட்டு வரும் மாவட்ட சரணடைதல் குழுக்களிடம் சரணடையலாம்.

சரணடைவோர்களது பாதுகாப்பினையும் விசாரணைகளையும் காலதாமதமின்றி செய்து முடிப்பதனையும் உறுதிப்படுத்தும் நோக்கில் சுயாதீன சரணடைதல் குழுவினர் தடுப்பு முகாமகளுக்கும், புனர்வாழ்வு முகாமகளுக்கு விஜயம் செய்வார்கள்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ண)

# புலிகள் மேஜர் சுரேந்திரன் ஸ்தூபி திறப்பு

தம்பலகாமம், ஏப் 22

வீர மரணமடைந்த மேஜர் சுரேந்திரனின் ஸ்தூபியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு மாத்தயா கடந்த 17ஆம் திகதி சலப்பை ஆற்றுச் சந்தியில் திறந்து வைத்தார்–

[ந—288]

# சிறிய மின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலை வாய்ப்புகளை வழங்குவது என இலங்கை மின்சார சபை உத்தேசித்திருக்கிறது–

இத்திட்டத்தின் மூலம் உள்நாட்டு தொழில் நுட்பவியலாளர்களும், ஜனசக்தி உதவியாளர்களும் பெரிதும் நன்மை அடைவர் என்று இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்–

(ண–வ)


ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
10 வருஷத்துக்கு முன்பு நடந்தகதை சொல்லப்படும் ஒரு உண்மைக் கதை
ரஜனிகாந்த் — ராதிகா
ரகுவரன் — சித்ரா
பாண்டியன் — மூர்த்தி
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

13 வது வாரம்
லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
விஜயா
(மட்டுநகர்)
2-30, 6-30, 9-30
பிரபு அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

19 வது வாரம்
ராஜா
(யாழ்நகர்)
10-30 2-30 6-00
சாந்தி
(மட்டுநகர்)
2-30 6-30 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

# முன்னணி நாயகனாக ராம்கி நடத்திய போராட்டங்கள்

"வாழ்க்கையில் பலவித போராட்டங்களைச் சந்தித்த பிறகுதான் முன்னணி கதாநாயகன் என்ற அந்தஸ்தைப் பெற முடிந்தது" என்று கூறும் நடிகர் ராம்கி, தனது வாழ்க்கைப் போராட்டங்களை இங்கே நினைவு கூறுகிறார்.

கடந்த சில ஆண்டுகளில் திரையுலகில் எத்தனையோ பேர் கதாநாயகர்களாக வந்த போதிலும்,

அறிமுகம் ஆன அந்த நாளில் இருந்தே இன்று வரை கதாநாயகனாக இருப்பவர் ராம்கி மட்டுமே.

தமிழ்ப்பட உலகின் இளம் கதாநாயகன் இன்று அவரே.

திருமணம் ஆகாத கமலுக்கு, முன்பு எப்படி கல்லூரி மாணவ, மாணவிகளிடம் வரவேற்பு இருந்ததோ, அந்த வரவேற்பை இன்று பெற்றிருப்பவர் ராம்கி.

அதை நாம் நேரிலேயே காண முடிந்தது.

"நட்சத்திர பேட்டி"க்காக சென்னை அண்ணா சாலையில் ஜெமினி பார்சன் காம்ப்ளக்சில் உள்ள ராம்கியின் அலுவலகத்துக்கு (வீடு) சென்றபோது அங்கே அவரது அறைக்குள்ளும், வெளியேயும் ரசிகர் கூட்டம்,

சந்திக்க வந்தவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு, "வித் லவ்" என்று ஆட்டோகிராப் போட்டு அனுப்பி விட்டு நம்மிடம் வந்தார்,

நீங்கள் சினிமாவிற்கு வரும் முன்பு எப்படி, எங்கே இருந்தீர்கள்? உங்கள் குடும்பம் எப்படி? சினிமாவுக்கு எப்படி வந்தீர்கள்? கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்...

"என் சொந்த ஊர் சாத்தூர் அப்பா அருணாசலம் போலீஸில் இன்ஸ்பெக்டராக இருந்தவர். அம்மா நல்லம்மாள்.

7 வது வகுப்பு வரை சாத்தூரிலும், பிறகு திருச்சியிலும், பி யு சி யை மதுரையிலும் படித்தேன்.

அப்பா இன்ஸ்பெக்டராக இருந்தாலும், எனக்கு அந்த வேலையில் சேர பிடிக்கவில்லை, படிக்கும் போதில் இருந்தே நான் சினிமா என்றால் பைத்தியமாக அலைவேன்.

சிவாஜி சார் படம் என்றால் உயிர். அவர் மாதிரி நடிக்கணும், சினிமாவில் சேரணும் என்றுதான் சின்ன வயதில் இருந்த ஆசை.

வீட்டிலே விவசாயப் பண்ணை இப்படி தொழிற்சாலை எல்லாம் இருந்தும், அதில் கூட



ராம்கி

நீதான் கதாநாயகன்" என்று சொல்லி இருந்தார்.

ஒரு வழியாக படிப்பு முடிந்து வெளியே வந்தோம். ஆபாவாணன் ஏற்கனவே சொல்லி இருந்த மாதிரி 4 வருடம் கழித்து "இரவுப் பாடகன்" என்ற பெயரில் படம் எடுத்தார், நான்தான் கதாநாயகன்.

முதலில் நான் "அட்வான்ஸ்" வாங்கிய படமும் அதுதான், அந்தப் படம் மிகப் பெரிய பட்ஜெட் படம், ஒரு கோடி ரூபா செலவில் எடுக்க திட்டம் இருந்தது.

ஆனால் எடுத்த எடுப்பிலேயே அவ்வளவு பெரிய "பட்ஜெட்"டில் படம் எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் நான் ஊருக்கு போய் விட்டேன்.

அப்போது நான் ரொம்ப சின்னப் பையன், 19 வயது இருக்கும், மற்ற டைரக்டர்களைப் போய்ப் பார்க்க வேண்டும். "சான்ஸ்" கேட்க வேண்டும். என்றெல்லாம் எனக்கு தோன்றவில்லை. விளையாட்டுப் பிள்ளையாக இருந்தேன்.

"சினிமா, சினிமா" என்று அலைந்ததால் வீட்டிலும் எனக்கு கெட்டபெயர். "இவன் சினிமாவினால் கெட்டுப் போய் விட்டான். இனி உருப்பட மாட்டான்" என்று கைகழுவி விட்டார்கள். ஒருநாள் ஏற்பட்ட சண்டையில் நான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

மீண்டும் சென்னை வந்தேன், இதே "ஜெமினி காம்பளக்சில்" ஒரு அறை எடுத்து தங்கினேன், அப்புறம் தான் எனக்கு சினிமாவில் சான்ஸ் தேடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது,

ஆனால் அது அவ்வளவு சீக்கிரத்தில் கைகூடவில்லை,

சாப்பாட்டுக்கு என்ன செய்வது? சில நண்பர்கள் உதவியால் சாப்பிட்டு வந்தேன். அதுவும் எவ்வளவு நாள் முடியும்?

அந்தச் சமயத்தில் என் அக்கா எனக்கு உதவி செய்தார். அக்கா மீனாட்சி, சென்னையில் தான் டாக்டராக இருக்கிறார்.

"எப்படியும் ஒருநாள் ராம்கி நல்ல நிலைக்கு வருவான்" என்ற அசைக்க முடியாத நம்பிக்கை என் அக்காவுக்கு, அதனால்தான் நான் கேட்கும் போதெல்லாம் அக்காவும், அத்தானும் பணம் கொடுத்து உதவி செய்தார்கள்.

அந்த "தெம்பில்" நானும் சென்னையில் காலம் கழித்து "நடிகன் ஆகியே தீருவது" என முடிவெடுத்தேன்.

அந்தச சமயத்தில் ராபர்ட்-ராஜசேகரன் டைரக்ஷனில் நடிக்க வாய்ப்பு வந்தது. ஆபாவாணனிடம் கேட்டேன். அவரும் நடிக்க சம்மதித்தார், அந்தப் படம்தான் "சின்னப்பூவே மெல்ல பேசு"

அதன் பிறகு "தங்கச்சி" படம் வந்தது. இந்த 2 படங்களும் தான் என்னை நடிகன் ஆக்கின-

அதன்பிறகு எனக்கு திருப்புமுனையை ஆபாவாணன் "செந்தூரப்பூவே" படத்தின் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

கடந்த வாரம் வெளிவந்த ஏவி எம் மின் "பெண் புத்தி முன்புத்தி" படம் வரை 25 படங்கள் நடித்து முடித்து விட்டேன்."

இவ்வாறு ராம்கி கூறினார்-

(இ-10)



# கரும்புத் தோட்ட எல்லையில் மக்களை குடியேற்றுவது ஆபத்து

## சூழல் பாதுகாப்பு சங்க உறுப்பினர்

கொழும்பு, ஏப்- 22

பல்தேச நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் செவனகலை சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான கரும்புத் தோட்ட எல்லையோரமாக ஏழை விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருவது பிரச்சினைகளை மட்டுமன்றி உயிராபத்தையும் தோற்றுவிக்கும்-

வனபரிபாலன இயற்கை சூழல் பாதுகாப்பு சங்க உறுப்பினர்களில் ஒருவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்- அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது-

இக் கரும்புப் பண்ணை உடவளவை தேசிய பூங்காவுக்கு அண்மையில் அமைந்துள்ளது இதனால் உடவளவை தேசிய பூங்காவைச் சேர்ந்த காட்டு யானைகள் அவ்வப்போது தமது எல்லையைக் கடந்து கரும்புகளை அழிக்கின்றன-

இந்த அழிவைத் தடுத்து நிறுத்தும் பொருட்டே பண்ணையின் எல்லையோர பகுதிகளில் ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகளைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-

யானைகளின் கொட்டத்தை அடக்க வேண்டுமானால் எல்லையோரமாகக் குழிகள் வெட்டப்பட வேண்டும்- அல்லது மின்சாரம் பாய்ச்சப்பட்ட வயர்களை பொருத்த வேண்டும்-

ஆனால் இவை செலவும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியனவாகும்- எனவேதான் மனிதர்களை குடியேற்றி கரும்பு தோட்டங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது-

இங்கு குடியேறும் ஏழை விவசாய குடும்பங்களுக்கு வீடொன்றை அமைத்துக் கொள்வதற்கு சிறிது நிலமும் கட்டிடப் பொருட்களும் கரும்பு விவசாயத்துக்கென அரை ஏக்கர் காணியும் வழங்கப்படுகிறது-

இங்கு விளையும் கரும்பு மேற்படி நிறுவனத்துக்கே விற்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது-

இவ்வாறு அவர் கூறினார்-

[இ-032]

## ஒட்டமாவடி, ஏறாவூர், சேதமுற்ற கூட். சங்கங்களை புனரமைக்க நிதி

கொழும்பு, ஏப். 22

கடந்தகால வன்செயல்களினால் சேதமுற்ற ஓட்டமாவடி ஏறாவூர் மற்றும் காத்தான்குடி கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களை புனரமைப்பதற்காக வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் நிதி வழங்கியுள்ளார்

நீண்ட காலத்திற்கு முன்னரே இந்தக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் சேதமுற்று இருந்தன-

அவற்றை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் பிரதேச கூட்டுறவு உதவி ஆணையாளர் மூலம் கூட்டுறவு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தன-

ஆயினும் புனர்நிர்மாணப் பணிகள் தாமதித்தே வந்தன-

இதனை அடுத்து வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் எம் பி முகைதீன் அப்துல் காதர் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை சந்தித்து கூட்டு

பின்னர் இந்த மூன்று கூட்டுறவுச் சங்கங்களினதும் கட்டிடங்களைப் புனரமைப்பதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவீதப் பணம் வழங்கப்பட்டதாக ஜனாப் அப்துல் காதர் தெரிவித்தார்-

[இ-ற]

## அம்மனுக்கு காணிக்கையாக்க வேண்டியது அன்பையே

### ஐ. தொ. கா. மாதர் அணித் தலைவி

பொகவந்தலாவை, ஏப் 22

ஆண்டுதோறும் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு திருவிழா கொண்டாடுகின்றோம் ஆனால் அம்மனுக்கு காணிக்கையாக்க வேண்டியது என்ன வென்றால் உண்மையான அன்பையும் உண்மையான பக்தியையும் ஆகும்- அதை விடுத்து வீண் ஆடம்பரங்களில் ஈடுபடக் கூடாது-

ஐ தொ கா மாதர் அணித் தலைவி திருமதி ஐ நல்லசெல்வம் (ஜே பி) இவ்வாறு கூறினார்-

ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா அக்காப்பத்தனை டயகம 4அவது டிவிசனில் அண்மையில் நடைபெற்றது அதில் ஐ தொ கா குழுவினர் கலந்து கொண்டனர்

திரு இரா தர்மலிங்கம் அங்கு பேசு போது கூறியதாவது-

பக்தியின் மூலம் மன அமைதி

## நெடுந்தீவுக்கு விரைவில் மின்சாரம் வழங்க கோரிக்கை

கொழும்பு, ஏப் 23

நெடுந்தீவு மக்களின் நீண்டகால குறைபாட்டை நீக்குமுகமாக அப்பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்-

இவ்வாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு

ஆணையாளர் மின்சக்தி, எரிசக்தி அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளார்-

தற்போது நெடுந்தீவில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது- தபால் அலுவலகத்திற்கும், ஆஸ்பத்திரிக்கும் மாத்திரம் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது-

...யமாக அலைந்தேன்.

சிவாஜி சார் படம் என்றால் உயிர். அவர் மாதிரி நடிக்கணும், சினிமாவில் சேரணும் என்றுதான் சின்ன வயதில் இருந்த ஆசை.

வீட்டிலே விவசாயப் பண்ணை இப்படிப்பட்ட தொழிற்சாலை எல்லாம் இருந்தும், அதில் கூட ஈடுபட மனம் வரவில்லை, சினிமாவில் சேரவேண்டும் என்பதில் தான் இருந்தேன்.

அதனால் படிப்பு முடிந்ததும் நேராக சென்னைக்கு வந்து திரைப்படக் கல்லூரியில், சேர்ந்தேன். அந்தக் கல்லூரியில் தான் இப்போது திரையுலகில் டைரக்டர்களாக இருக்கும் ஆபாவாணன், அரவிந்தராஜ், தேவராஜ், உதயகுமார் போன்றவர்களின் நட்பு கிடைத்தது. அவர்கள் டைரக்ஷன் துறையில் பயிற்சி பெற்று வந்தார்கள்.

திரைப்படக் கல்லூரியில் படிக்கும்போது ஆபாவாணன் 5 படங்களை டைரக்ட் செய்தார்.

5 படங்களிலும் நான் தான் கதாநாயகனாக நடித்தேன். அதனால் எனக்கும் அவருக்கும் இடையே நட்பு பலமாக அமைந்தது.

என் பெயர் ராமகிருஷ்ணன், ஆனால் எல்லோரும் அதை சுருக்கி "ராமகி" என்றுதான் கூப்பிடுவார்கள். அதையே தான் சினிமாவிலும் வைத்துக் கொண்டேன்.

ஆபாவாணனுக்கு என்னை பிடித்துப் போய் விட்டதால் அவரே ஒருநாள், "ராமகி... திரைப்படக் கல்லூரியை விட்டு வெளியே சென்றதும் நான் படம் தயாரித்தால் அதில்

தினபதி சினிமா



"மல்லு வேட்டி மைனரின்" மகுடிக்கு, மங்கையும் நன்றாகத் தான் மயங்கி விட்டாள். இல்லாவிட்டால் வெட்கம் வந்து விலகிச் செல்வாளா? (சத்யராஜ் - சீதா) [படம்- மல்லுவேட்டி மைனர்]

(இ-10)

# ராமராஜன் நடிக்கும் 'நமக்காக ஒருவன்'

ராமராஜன் கதாநாயகனாக நடிக்கும் படத்தை சிராஜ் டைரக்ட் செய்கிறார்.

"அன்புக் கட்டளை" படத்தை தயாரித்த ஸ்ரீ காயத்ரி சினி ஆர்ட்ஸ் ராமராஜன் - சுப்பையா இணைந்து வழங்க லட்சுமி தயாரிக்கும் 2ஆவது படம் "நமக்காக ஒருவன்".

கதை, திரைக்கதை, வசனம் எழுதி, சிராஜ் டைரக்ட் செய்கிறார். ஏற்கனவே ராமராஜன் நடித்து வெளியான "என்னெ பெத்த ராசா" என்ற படத்தை இவர் டைரக்ட் செய்துள்ளார்.

தற்போது கே பிரபாகரனின் "தங்கத்தின் தங்கம்", சுரேஷ் காந்த் தயாரிக்கும் "ஊரெல்லாம் உன்பாட்டு" போன்ற படங்களை டைரக்ட் செய்து வருகிறார். இளையராஜா இசை அமைக்கிறார்.

ராமராஜன் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிக்கும் நடிகை உட்பட மற்ற நடிகர் — நடிகைகள் தேர்வு நடைபெற்று வருகிறது. முன்னணி நடிகர், நடிகைகளும் இதில் நடிக்கிறார்கள்.

(இ-10)



ராமராஜன்

...ஆயினும் புனர்நிர்மாணப் பணிகள் தாமதித்தே வந்தன.

இதனை அடுத்து வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் எம் பி முகைதீன் அப்துல் காதர் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை சந்தித்து கூட்டுறவு சங்கக் கட்டிடங்களை புனரமைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு, ஏப் 23

நெடுந்தீவு மக்களின் நீண்டகால குறைபாட்டை நீக்குமுகமாக அப்பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே நவரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து யாழ் விசேஷ ஆணையாளர் மின்சக்தி, எரிசக்தி அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

தற்போது நெடுந்தீவில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. தபால் அலுவலகத்திற்கும், ஆஸ்பத்திரிக்கும் மாத்திரம் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இப்பகுதியில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யுமுகமாக உடனடியாக மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வேலைத் திட்டத்தின் கீழ் இங்கு மின்சாரம் வழங்க சுமார் 2 லட்சத்து 57 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது.

எனவே இதனை கருத்தில் கொண்டு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ—ர)

ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா அக்காப்பத்தனை டயகம 4ஆவது டிவிசனில் அண்மையில் நடைபெற்றது அதில் இ தொ கா குழுவினர் கலந்து கொண்டனர்.

திரு இரா தர்மலிங்கம் அங்கு பேசுகையில் கூறியதாவது:

பக்தியின் மூலம் மன அமைதியையும், நல்லொழுக்கத்தையும் பெற முடியும். உழைத்து உழைத்து உருக்குலைந்து போனதொழிலாளர்கள் தமது பக்தியின் மூலம் இறை அருளைப் பெற முயல வேண்டும் என்றார்.

இங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களுக்கு இ தொ கா சார்பில் திருமதி நல்லசெல்வம், திரு தர்மலிங்கம், திரு கே இராமநாதன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

[இ-041]

ஆசிரியர்கள் கல்வி ஆணைக்குழு செல்ல

# மாகாண கல்வி பணிப்பாளரின் குறிப்பு தேவை

கொழும்பு, ஏப் 23

தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கல்விச் சேவைகள் ஆணைக் குழுவை நாடிவரும் ஆசிரியர்கள் மாகாண கல்விப் பணிப்பாளர்களின் குறிப்பு ஒன்றுடன் வர வேண்டும்.

பாடசாலை அதிபர்களுக்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு இவ்வாறு அறிவித்துள்ளது.

குறிப்பாக இடமாற்றங்களைப் பெறுவதற்காக வரும் பல ஆசிரியர்கள் தமது இடமாற்ற விண்ணப்பத்தில் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைக் குறிப்பிடுவதில்லை.

சில சந்தர்ப்பங்களில் சேவை விவரங்கள் கூட சரிவர கொடுக்கப்படுவதில்லை என்று ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் கூறினார்.

ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கவே இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக ஆணைக் குழு அதிகாரி தொடர்ந்து கூறினார்.

[இ-007]

# நவகமுவ கிராமம் புனரமைக்கப்படும்

கொழும்பு, ஏப் 23

வறிய மக்களுக்கு உதவும் அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் நவகமுவ கிராமம் தகவல்துறை அமைச்சின் அனுசரணையுடன் புனரமைக்கப் படவுள்ளது.

கொழும்பிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள நவகமுவ கிராமத்தில் 1900க்குமதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன.

இவர்களில் 500 பேர் ஜனசக்தி உதவி பெறுபவர்கள், என்றும் மாத வருமானமாக 300 ரூபாவுக்கு 700 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையையே பெறுகிறார்கள் என தெரிய வந்துள்ளது.

முக்கியமாக கைத்தொழில் துறையும், விவசாயத்துறையும் பொருளாதார ரீதியாக முன்னேற்றப்பட வேண்டும்.

இத் திட்டத்திற்கு அரச சார்பற்ற சில நிறுவனங்களும் உதவ முன்வந்துள்ளன.

[ஐ-ழ]

# முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில்

## ஹத்தமுல் குர்ஆன் வைபவம்

கொழும்பு, ஏப் 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று 24ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு காங்கிரஸின் டாம் வீதி தலைமையகத்தில் "ஹத்தமுல் குர்ஆன்" வைபவம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர்களான மர்ஹூம் ஐ எம் மன்சூர், மர்ஹூம் எஸ் ஐ அலி உதுமான், லெப்பை, மன்சூர் — மற்றும் காரைதீவு உப பொலீஸ் நிலையத்தில் கொல்லப்பட்ட 42 முஸ்லிம் பொலீஸ் வீரர்கள், சமூக விடுதலை போராட்டத்தில் அகால மரணமடைந்த தியாகிகள் ஆகியோரின் நினைவாகவே இந்த ஹத்தமுல் குர்ஆன் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம் எச் எம் அஷ்ரப், தவிசாளர் ஜனாப் சேகு இஸ்ஸதீன் கட்சியின் அரசியல் குழு அங்கத்தவர்கள். மாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர்.

"ஹத்தமுல் குர்ஆன்" வைபவத்தை தொடர்ந்து "இப்தார்" நிகழ்ச்சியும் இடம்பெறும்.

(டு—வ)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4466
— 1990 ஏப்ரல் 24 —

# பிறை பார்ப்பதில் முஸ்லிம்கள் அக்கறை கொள்ள வேண்டும்

## உலமாச் சபை பொதுச் செயலாளர்

### மௌலவி எம். ஜே. எம். றியாழ் வலியுறுத்து

கொழும்பு, ஏப்- 22

பெருநாள் தினத்தைப் பற்றிய முடிவை அறிவதில் ஆவலாக இருக்கும் பல முஸ்லிம்கள், பிறை பார்ப்பதில் அக்கறை கொள்வதில்லை

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவி அல் ஹாஜ் எம் ஜே எம் றியாழ் இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறார்-

"நோன்புப் பெருநாளை நிர்ணயிப்பதற்குப் பிறை பார்த்தல் அவசியம்" என்ற தலைப்பில் மௌலவி றியாழ் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்-

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது:-

நோன்புப் பெருநாளைப் பற்றிய தீர்மானம் எடுப்பதில் சில வேளைகளில் முஸ்லிம்களிடையே பிரச்சினைகள் ஏற்பட்டதும் அவற்றைத் தீர்ப்பதற்காக அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா பிறைக் குழுவொன்றை நியமித்து ஒவ்வொரு மாதமும் தலைப்பிறை பார்க்கும் பணியில் ஈடுபட்டு வருவதும் சகலரும் அறிந்த விடயம்

ஒவ்வொரு சந்திர மாதமும் 29ஆம் நாள் மாலையில் அடுத்த மாதத்தின் தலைப் பிறையைத் தீர்மானிப்பதற்காக பிறை பார்த்தலுக்கான முயற்சிகளை மேற்கொள்வது பர்ளு கிபாயா என்றழைக்கப்படும் பொதுக் கடமையாகும்-

ஏனெனில் இஸ்லாமிய வருடத்தில் சில மாதங்கள் 29 நாட்களையும் சில மாதங்கள் 30 நாட்களையும் கொண்டவையாகும்-

நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் நோன்பு நோற்ற காலங்களின் ரமழான் மாதங்கள் பெரும்பாலும் 29 நாட்களில் முடிவடைந்துள்ளன-

எனவே, நபி (ஸல்) அவர்களுடன் 30 நாட்கள் நோன்பு நோற்றதை விட 29 நாட்கள் நோன்பு நோற்றதே அதிகம் என்று ஸஹாபாக்களிற் பலர் தெரிவித்துள்ளனர்-

இவ் வருட ரமழான் மாதத்தின் 29ஆம் நாளான 26-4 90 வியாழன் மாலை சூரிய அஸ்தமனத்தின் பின்பு ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை தென்படுகிறதா? என்பதைப் பார்ப்பதற்காக தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமபடி சகல அரபுக் கல்லூரி அதிபர்களும் உலமாக்களும் கதீப்மார்களும் பள்ளிவாசல் பரிபாலகர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

ஷவ்வால் தலைப்பிறை பார்த்தல் சம்பந்தமாக ஷரீஅத் சட்டப்படி கைக்கொள்ளப்பட வேண்டிய நடைமுறை விதிகள்

(அ) நீதமாக நடக்கும் 2 முஸ்லிம் ஆண்கள் தமது வெற்றுக் கண்களால் பிறையைப் பார்த்திருக்க வேண்டும்-

(ஆ) பிறை பார்த்ததாகக் சாட்சியமளிப்பவர்கள் பெரும் பாவங்கள் எதிலும் ஈடுபடாதவர்களாக இருப்பதோடு கூடியவரை சிறிய பாவங்களைத் தொடர்ந்து செய்யாதவர்களாக இருக்க வேண்டும்-

(இ) பிறையைப் பார்த்தவர்கள் தமமைப் பற்றிய விவரங்களைத் தாம் வாழும் பகுதி காழி நீதிபதியிடமோ, உலமா சபை உறுப்பினர்களிடமோ ஊர்ப் பள்ளிவாசல் பரிபாலகர்களிடமோ கூறி பிறை கண்டது பற்றிய தகவலை அறிவிக்க வேண்டும்-

(ஈ) மேற்படி அறிவிப்பைப் பற்றி நன்கு விசாரித்த பின் அறிவித்தவர்கள் தகுந்த சாட்சிகள் தான் என்று ஏற்றுக் கொள்ளும் காழி நீதிபதி உலமா சபை உறுப்பினர்கள், ஊர்ப் பள்ளிப் பரிபாலகர்கள் என்போர் தமக்குக் கிடைத்துள்ள தகவல்களை கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு உடனே அறிவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்-

தலைப் பிறை பற்றிய தகவல்களைச் சேகரித்துத் தீர்மானங்கள் எடுப்பதற்காக அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா, கொழும்பிலும் சுற்றுப்புற நகரங்களிலுமுள்ள பள்ளிவாசல்களின் கதீபுகள் உலமாக்கள் தர்மகர்த்தாக்கள் முஸ்லிம் சமய கலாசார விவகாரத் திணைக்களத்தின் பிரதிநிதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் என்போர் சமுகமளித்திருப்பார்கள்-

பிறை கண்டது பற்றிய தகவல் நேரிலோ தொலைபேசி மூலமோ கிடைத்ததும் அதைப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்தப்பட்டவுடன் ஜம் இய்யாவின் பிறைக் குழு சார்பில் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பவர் அறிவிப்பார்-

மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் அங்கு எடுக்கப்படும் தீர்மானம் வானொலி, தொலைக்காட்சி பத்திரிகைகள் மூலம் அறிவிப்பதற்கான ஏற்பாடுகளைப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மேற்கொள்வர்-

முஸ்லிம் சகோதரர்களிற் பலர் பெருநாள் தினத்தைப் பற்றிய முடிவை அறிவதில் அவலோடு இருக்கிறார்களேயன்றி பிறை பார்ப்பதில் அக்கறை செலுத்துகிறார்கள் இல்லை என்பது கடந்தகால அனுபவங்கள் மூலம் அறிந்த உண்மை-

தலைப்பிறையைப் பார்ப்பதற்கான முயற்சிகளை எடுத்தல் பர்ளு "கிபாயா"வாக இருப்பதால் அது ஒரு "இபாதத்" ஆகும்-

எனவே, முஸ்லிம் கிராமங்களில் சகலரும் பிறை பார்த்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு பிறை தென்பட்டால் தகுந்த சாட்சியங்களோடு பெரிய பள்ளிவாசலுடன் நேரிலோ 432110 என்ற தொலைபேசி இலக்கம் மூலமோ தொடர்பு கொள்ளுமபடி அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கிறது-

காலநிலை சீராக இருந்தால் வெற்றுக் கண்ணுக்குத் தலைப் பிறை நிச்சயமாகத் தென்படலாம் என்று வானியல் நிலைக்களத்தின் அறிக்கைகள் கூறுகின்றன-

தென்படாவிட்டாலும் பிறை பார்த்தல் எனும் நல்ல அமலுக்குரிய நற்கூலியை அல்லாஹ் வழங்குவான் என்ற நம்பிக்கை நம் ஒவ்வொருவரிடமும் உறுதியாக இருக்க வேண்டும்-

"நன்மையான கருமங்களிலும் தக்வா எனும் இறை பக்தியிலும் முஸ்லிம்கள் பரஸ்பரம் உதவியாக இருக்க வேண்டும்" என்ற அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க பெருநாள் தினத்தை நிர்ணயிப்பதற்கு முஸ்லிம்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்-

இவ்வாறு அவர் கூறியுள்ளார்

[ல-007]

## தகுதி பெறும் எல்லோருக்கும் பல்கலைக் கல்வி

ஜி சி ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிப்பதற்குத் தகுதி பெறும் எல்லா மாணவர்களுக்கும் இனிமேல் உயர் கல்வி கற்கும் வசதி கிடைக்கப் போகிறது.

தகுதி பெறுபவர்கள் எல்லோரையும் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்வதற்குப் பல்கலைக் கழகங்களில் இடவசதி போதாது.

அதனால் வருடம் தோறும் தகுதி பெறுபவர்களில் ஆகக் கூடுதலான புள்ளிகளையுடையவர்கள் மட்டும் இட வசதிக்கு ஏற்ப பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

சுமார் 12 ஆயிரம் பேர் தகுதியிருந்தும் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

இவர்களுக்கு இனிமேல் பிரதேச பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி கற்பிக்கப் படும் என்று நீதி மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீது அறிவித்திருக்கிறார்.

பாடசாலை நேரத்துக்குப் பின்னர் மாகாணங்களில் மூடப்பட்டிருக்கும் கல்லூரி வகுப்பறைகளில் வைத்து இந்த மாணவர்களுக்கு உயர் கல்வி போதிக்கப்படும் என்று அமைச்சர் ஹமீது தெரிவித்திருக்கிறார்.

இந்த மாத ஆரம்பத்தில் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியும் பல்கலைக் கழகத்தில் சேரத் தகுதி பெறும

## மன்னார் முசலி வித்தியாலயத்தின் குறைகள் நீங்குமா?

கொழும்பு, ஏப். 23

மன்னார் முசலி மகா வித்தியாலயத்தில் காணப்படும் குறைபாடுகள் நீங்குமா?

இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும், பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலையின் நலன்விரும்பிகளும் இவ்வாறு அங்கலாய்க்கின்றனர்

இப் பாடசாலையில் 700க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்- இப்பாடசாலையில் தளவாட பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும், கட்டிட வசதியும் இன்மையால் மாணவர்கள் அவதியுறுகின்றனர்-

ஆரம்ப கல்வி, கணிதம் மனையியல். உடற் கல்வி. சித்திரம் ஆங்கிலம் போன்ற பாடங்களை போதிப்பதற்கு வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகிறது-

[இ]

## ஜனசக்திக்கு பாகிஸ்தான் அறிஞரின் பாராட்டு

கொழும்பு, ஏப்- 22

நாட்டு மக்களினதும், நாட்டினதும் முன்னேற்றத்துக்கு ஜனாதிபதி கடுமையாக உழைக்கிறார்- ஜனாதிபதி செயல் திட்டங்கள் பாராட்டத்தக்கதாகும்-

தலைசிறந்த சன்மார்க்க அறிஞரும், பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி செயலாளருமான மௌலானா அல்ஹாபிஸ் முகமது இத்ரீஸ் இவாறு கூறினார்-

இவர் வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாகிர் மார்க்காரை அண்மையில் அமைச்சில் வைத்து சந்தித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவை மூடிவிட ஜனாதிபதி எடுத்த தீர்மானத்திற்கும் மௌலானா இத்ரீஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்-

[இ-007]

## செய்தித் திரட்டு

### திறப்பு விழா

கேகாலை, ஏப்- 22

கேகாலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கையில் 1000 அவது கிராம வங்கிக் கிளை கேகாலை – ரந்தெனியவில் திறந்து வைக்கப்பட்டது

கூட்டுறவு விவசாயத்துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி இதனை அண்மையில் திறந்து வைத்தார்-

முதலாவது கிராம வங்கிக் கிளை 1964 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது-

[ெ-197]

### சுய வேலை வாய்ப்பு

ஏறாவூர், ஏப்- 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அதாவது தமது கணவன்மாரை இழந்த விதவைகள் மற்றும் உழைப்பாளர்களை இழந்தோருக்கு சுய சேவை வாய்ப்பு கிட்டும்

அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியும் பல்கலைக் கழகத்தில் சேரத் தகுதி பெறும் எல்லா மாணவர்களும் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறினார். அதற்காகப் பல்கலைக் கழகங்களில் வசதி செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

அதையடுத்து கடந்த 10 ஆம் திகதி இந்தப் பத்தியில் பின்வருமாறு எழுதியிருந்தோம்:—

தகுதியுள்ள எல்லோருக்கும் பல்கலைக் கழகக் கல்வி வசதி கிடைப்பது உண்மையிலேயே பாராட்டி வரவேற்க வேண்டிய விஷயம் ஆகும்.

பல்கலைக் கழகங்களில் வேண்டிய வசதிகளைச் செய்துவிட்டு தகுதியுள்ள எல்லா மாணவர்களையும் பல்கலைக் கழகங்களில் சேர்க்க அமைச்சர் முடிவு செய்திருக்கிறார்.

மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் தான் உயர் கல்வி கற்று பட்டம் பெற வேண்டும் என்பதில்லை.

மாணவர்கள் வெளியில் உள்ள வசதியான கல்லூரிகளில் படித்து பல்கலைக் கழகப் பரீட்சைக்குத் தோன்றி சித்தியடையும் பட்சத்தில் பல்கலைக் கழகத்துப் பட்டத்தைப் பெறலாம் அல்லவா?

இது இணைப்புக் கல்லூரி முறை. இந்தியா, இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் வழக்கில் உள்ளது.

நல்ல தரமான கல்லூரிகளைத் தெரிவு செய்து அவற்றைப் பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரிகளாக்கலாம். இணைப்புக் கல்லூரிகளுக்கு அரசு வேண்டிய உதவிகளைச் செய்யலாம்.

எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தகுதியுள்ள எல்லா மாணவர்களையும் சேர்ப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு அதிக பணம் தேவைப்படும்.

இணைப்புக் கல்லூரித் திட்டத்தில் அவசியமற்ற பணச் செலவு இல்லை. அதேவேளை பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெறுவதற்கும், இணைப்புக் கல்லூரிகளில் கற்றுப் பல்கலைக் கழகப் பட்டம் பெறுவதற்கும் வித்தியாசமில்லை. இணைப்புக் கல்லூரித் திட்டம் பற்றி அமைச்சர் பரிசீலனை செய்ய வேண்டும்.

இப்படி எழுதியிருந்தோம்.

இப்போது அமைச்சர் ஹமீத்திடம் அவ்வாறே கேட்டுக் கொள்கிறோம்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இணைப்புக் கல்லூரிகள் மாணவர்களைப் பல்கலைக் கழகப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தயார் செய்யும் போது பல்கலைக் கழகங்களுக்கும் இணைப்புக் கல்லூரிகளுக்குமிடையே உயர் கல்வி கற்பிப்பதில் ஆரோக்கியமான போட்டி ஏற்படும். அது நல்ல பலனைத் தரும்.

---

முனையியல். உடற் கல்வி. சித்திரம் ஆங்கிலம் போன்ற பாடங்களை போதிப்பதற்கு இங்கு ஆசிரியர்கள் இல்லையாம்.

இப் பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரும் இல்லையாம் நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கப்பட்டதற்கும் எவ்வித பதிலும் இல்லையாம்—

இப் பாடசாலைக்குத் தேவையானவற்றை வழங்கி இப் பாடசாலையை கொத்தணி பாடசாலையாக தரம் உயர்த்த

---

# புனித ரமழான் சிந்தனைகள்

"(விசுவாசிகளே!) எவர்கள் தங்கள் பொருட்களை (தர்மத்திற்காக) இரவிலும், பகலிலும் இரகசியமாகவும் பரகசியமாகவும் கொடுக்கிறார்களோ? அவர்களுடைய கூலி அன்னாரின் இறைவனிடத்தில் உண்டு—

தவிர அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை— அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள்—

(2–274)

"நீங்கள் தர்மங்களை பகிரங்கமாக்கினால் அது நலமானதே—

ஆனால் நீங்கள் அவைகளை மறைவாக எளியாருக்கு அளித்தால் அது உங்களுக்கு மிக்க நலமாகும்—

அன்றியும் அது உங்கள் தீமைகளிற் சிலவற்றைப் பரிகசிக்கும்—

இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்கிறவனாக இருக்கிறான்"

(2–271)

பகிரங்கமாய் கொடை கொடுத்தாலும் புண்ணியம் உண்டு

ஆனால் பெருமைக்காவும் புகழுக்காகவும் பலரறியக் கொடை கொடுத்தால் அக் கொடையாளிக்கு ஒரு புண்ணியமும் கிட்டாது—

இரகசியமாய்க் கொடை கொடுப்பதில் ஏழைகளை இழிவு படுத்தாதிருக்கவும் அவனது அவசியம் எது என்று உணர்ந்து அதற்குத் தக்கவாறு உதவவும் ஏழையல்லாதார் வந்து எடுக்காமலிருக்கவும் கொடுப்போர் தம்மைப் பற்றி கர்வம் உண்டாகாமலிருக்கவும் ஏதுவாகிறது—

இதனால்தான் முற்காலத்தில் வாழ்ந்த வள்ளல்கள் தான தர்மத்தை இரகசியமாய்ச் செய்து வந்தனர்—

சிலர், பிறர் தங்களை அறிந்து கொள்ள முடியாதவிதத்தில் கொடை கொடுத்து வந்தனர்—

சிலர், ஏழைகள் நித்திரை செய்யும் சமயம் பார்த்து அவர்களின் ஆடையில் பணத்தை யாரும் அறியாத விதத்தில் கட்டி வைத்துச் சென்றனர்—

மற்றும் சிலர், ஏழைகள் தங்கும் இடங்களில் பண முடிப்பை வைத்துப் போயினர்—

இவ்விதமாகக் கொடுப்பவரை வாங்குவோரும் மற்றோரும் அறிந்து கொள்ள முடியாத விதத்தில் ஈகை அனுஷ்டிக்கப் பட்டு வந்தது—

இதற்கு நாயகம் (ஸல்) அவர்கள்:—

"புகழை விரும்பி ஈவோர். பிறர் மெச்ச வேண்டி ஈவோர். தம் ஈகையைச் சொல்லிக் காட்டுவோர் ஆகியவர்களின் தர்மம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது" என்று திருவாய் மலர்ந்தியருளியதே காரணம்—

மேற்கண்ட எதிலும் சேர்ந்து விடாதிருக்கவே நம் முன்னோர்கள் தங்கள் கொடைகளை இரகசியமாய்க் கொடுத்து வந்தனர்—

ஆனால் ஒருவர் கொடை கொடுப்பதைப் பார்த்து மற்றவரும் கொடை கொடுப்பார் என்றிருந்தால் அப்படிப்பட்டவர் செய்யும் கொடைகள் நன்மை பயக்கத் தக்கதாகும்—

இவ்விருவகைக் கொடைகளைப் பற்றியே மேற்கூறிய திருமறை வசனம் அறிவுறுத்துகிறது

எனவே தர்மம் கொடுப்போராக நாமும் மாறுவோம்

ஏ எம் ஹபீபுர்ரஹ்மான்

---

களைச் சேகரிக்கத் திராணிகள் எடுப்பதற்காக அகில இலங்கை ... கல் உள்ள ... குழு ... கள் 25 4 10 வியாழன் ... பொறுப்புடன் ... கூடுவர் அவ்வேளையில் ... பள்ளி ... களும்

... என்று வளிமண்டலத் திணைக்களத்தின் அறிக்கைகள் கூறுகின்றன—

அதையடுத்து பிறை பார்ப்பவர்கள் ... பிறை தென்படாது— ... இடங்களில் தென்பட்டால் ... பிறை தென்பட்டாலும் தென்

---

... தலைவர்கள் ... உழைப்பாளர்களை இழந்தோருக்கு சுய சேவை வாய்ப்பு கிட்டும் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கப் படும்—

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது—

[இ–073]

---

# நிந்தவூர் நெற்செய்கையில் கபில நிறத்தத்தி தாக்கம்

மூதூர், ஏப். 22

நிந்தவூர்ப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விவசாய நிலங்களில் கடந்த சில போகங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் நெற்செய்கையை கபில நிறத் தண்டு தத்திகளின் (அறக் கொட்டியா) தாக்கம் பெருமளவில் பாதித்து வருகின்றது—

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பயங்கர பூச்சியின் தாக்கத்திலிருந்து நெல் வயல்களை பாதுகாத்துக் கொள்ள நிந்தவூர் விவசாய போதானாசிரியர் செய்கைமுறை ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார். அவர் வழங்கிவரும் ஆலோசனைகள் பின்வருமாறு—

* விவசாயிகள் தொடர்ந்து கால வரையின்றி விதைப்பதால் இந்தப் பூச்சியின் (கபில நிறத் தண்டுதத்தி) விருத்திக்கு அவசியமான உணவு தொடர்ந்து கிடைக்கின்றது— இதைத் தவிர்த்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் விதைத்தல் வேண்டும்—

பெரும் போகத்தில் அக்டோபர் 15 தொடக்கம் நவம்பர் 15 வரையும் சிறுபோகத்தில் ஏப்ரல் 15 தொடக்கம் மே 15 வரையும் விதைத்து முடித்தல் வேண்டும்—

* 3–3½ மாத விதை நெல் இனங்களையே விதைப்பக்குப் பயன்படுத்த வேண்டும்— இந்த இனங்களில் இரண்டு சந்ததிகளை இப்பூச்சி விருத்தி செய்யக் கூடிய நிலையிலிருப்பதால் இதன் பெருக்கம் மிகக் குறைவாகவே காணப்படும், ஆதலால் மிக இலகுவாகக் கட்டுப்படுத்திவிடலாம்—

* கூடுதலான யூரியா பசளை பாவிக்கப்பட்டு வருவதனால் நெற்பயிரின் தண்டு மென்மையடைந்து பூச்சியின் தாக்கத்திற்கு ஏதுவாக இருக்கின்றது—

எனவே விவசாயத் திணைக்களத்தின் சிபார்சின்படி "சமச்சீர்" பசளையைப் பாவிக்க வேண்டும்— மேலதிகமான யூரியா பசளைப் பிரயோகத்தைத் தவிர்க்க வேண்டும்—

* ஒரு ஏக்கருக்கு நான்கு அல்லது ஐந்து புசல் விதை நெல்லை விதைத்தல் அல்லது நிரையில் நாற்று நடுதல், விதை கருவி மூலம் நிரையில் விதைத்தல் நன்று—

* வயலுக்கு அளவுக்கு அதிகமான நீர் விடுவதைத் தவிர்த்தல் நல்லது—

* இலங்கையில் இப் பூச்சிக்கு பி ஜி 379–2 என்ற ஒரே இன நெல்தான் எதிர்ப்பு இனமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது— இது விதைத்தல் தாக்கத்திலிருந்து நிவாரணம் தரவல்லது—

* இந்தப் பூச்சியின் விருந்து வழங்கிகள் களைகளே ஆகும் ஆகவால் வயலுக்கு அண்மையிலோ வயலிலோ எவ்வித களைகளும் இருத்தல் கூடாது—

* இரண்டு பயிர்ச்செய்கைப் போகங்களுக்கிடையில் குறைந்தது இரண்டு மாத கால இடைவெளி விடுவதனால் இந்தப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தைத் தடுக்க முடியும்—

[இ–217]

---

# இலங்கை பொது சேவையாளர் சங்க மேதினம்

கண்டி, ஏப்– 22

கண்டியை தலைமை அலுவலகமாக இயங்கும் இலங்கை பொதுச் சேவையாளர் சங்கம் அதன் மே தினத்தை கண்டியில் கொண்டாட உள்ளது.

மே மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்காவில் இதனைக் கொண்டாட சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது—

[இ–017]

# அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு

வெள்ளி விழா செயலகம்
30 ஆஸ்பத்திரி வீதி
கொழும்பு—1
தொலைபேசி- 433439

புனித லைலத்துல் கத்ர் இரவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட

## வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகள்

தலைமையகம்—
இல் 10 பீரிஸ் வீதி
களுபோவில
தொலைபேசி- 71—6953

## முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கான ஐந்தாண்டு திட்டம்

23—04—1990

ஹிஜ்ரி 1410 ரமழான் பிறை 27

### டாக்டர் கலீல் வாழ்த்து

அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் அல்ஹாஜ் எம் சீ எம் கலீலின் செய்தி —

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு இன்ஷா அல்லாஹ் இலங்கையில் முஸ்லிம் கல்விக்காக ஓர் ஆர்வமான திட்



டத்தை வகுத்துள்ளது- இத்தகைய ஒரு திட்டம் முஸ்லிம்களுக்கு மிக இன்றியமையாததாகும்- இது சமூகத்துக்கும் பாரிய நன்மைகளை பயக்கும்.-

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டில் நடவடிக்கைகள் தொடர்பாக அகில இலங்கை முஸ்லிம் லீக் பெருமை கொள்கிறது- முஸ்லிம் கல்வி நலன்களை முன்னேற்றுவதற்காக சுயமாக இயங்கும் வரை ஒரு பெற்றோரைப் போன்ற அடிப்படையில் அகில இலங்கை முஸ்லிம் லீக் செயற்பட்டது- அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவர் என்ற முறையில் உறுப்பினர்கள் சார்பிலும் இத்திட்டங்களும் நடவடிக்கைகளும் வெற்றி பெறுவதற்கு நான் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்- முஸ்லிம் இளைஞர்களின் கல்வி வளர்ச்சி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது-

### முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு ஒரு ஐந்தாண்டு திட்டம்

அம்சம்

1 முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு (மார்ச் 10, 11—1990)

2 மாவட்ட முஸ்லிம் கல்வி மாநாடுகள் 25 மாவட்டங்கள்-

3 கல்வி ஆய்வுகள்

(அ) தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் குடும்ப தொகுதிகள் தகவலும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புதலும்-

நிலையங்களுக்கும் நூல்கங்கள் 600 பாடசாலை பகுதிகளில்

11 முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடுதல். 25 நூல்கள் (வருடத்துக்கு 5 நூல்கள்)

12 (அ) இருபது பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை செய்யும் சிபார்சுகளைத் தெரிவிக்க அமுல்படுத்தவும் 20 குழுக்கள் (ஆ) அச்சகம்

### முஸ்லிம் கல்வி மாநாட்டின் இலக்குகளும் பணிகளும்

இஸ்லாமிய வாழ்வு முறையைப் பாதுகாப்பது அடிப்படைத் தேவையாகும்.

முஸ்லிம் குழந்தைகளின் கல்வியும் மதத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

இதற்குப் புறம்பான கல்வி இஸ்லாத்தினால் ஏற்கப்படாததாகும்.

பல இன மக்கள் வாழும் ஒரு சமூக அமைப்பில் இஸ்லாமியக் கோட்பாடுகள் உறுதியான செயற்பாடுகள் மூலமே பராமரிக்கப்படக் கூடியதாக இருக்கும்.

முஸ்லிம்களின் நலனில் ஆர்வம் படைத்த பிரஜைகளால் இது சாத்தியமாகும்.

இவர்களின் பணி இவ்விடயத்தில் அரசு நடவடிக்கைகளை வழி நடத்துவதாகும்.

முஸ்லிம் தேவைகளை சரிவரப் புரியாததன் மூலம் உருவாகும் முஸ்லிம்களின் நலனுக்காக சவால்களை எதிர்கொண்டு சமாளிப்பதாகும்-

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிதம் பெற்றது.

இஸ்லாமியச் சூழலில் முஸ்லிம் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த முஸ்லிம் கல்வி மாநாடு தோன்றியது.

கல்வித் துறையில் மதம் கலாசார தனித்துவம் ஆகியவற்றைப் பேணி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு கடந்த கால் நூற்றாண்டுகளாக சமூகத்துக்கு நல்ல பல பணிகளைப் புரிந்து வந்துள்ளது.

கல்வித் துறையிலான துரித மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து தேசிய கல்வி முறையிலான சீர்திருத்தங்களையும் சீர்தூக்கிப் பார்த்து பல்வேறு அரசியற் கருத்துடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், கல்வி நிறுவனங்களுடனும் ஆர்வமுள்ள பொது மக்களுடனும் நெருக்கமாகத் தொடர்புபட்டு, இணைந்து செயற்பட்டு இலங்கையில் உயரிய கல்விப் பாரம்பரியங்களுக்காக அ இ மு க மாநாடு பணியாற்றி வந்துள்ளது.

கல்வியில் இஸ்லாமியப் பெறுமானங்களை பாதுகாத்தல்.

முஸ்லிம் கல்வித் துறையில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அடைந்த ஈட்டற்றங்கள், வெற்றிகள் பற்றிய சிறு குறிப்பிலிருந்து அதன் பணிகளின் முக்கியத்துவத்தை உணரலாம்.

(அ) சமய சுற்றாடலும், கலாசாரத் தனித்துவமும்: அரசாங்க

களுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள்: முஸ்லிம் பெரும்பான்மை பாடசாலைகளுக்கு முஸ்லிம் அதிபர்கள் நியமிப்பதை உறுதிப்படுத்துதல்.

முஸ்லிம் மாணவர்களுடனான பாடசாலைகளுக்கும், முஸ்லிம் பாடசாலைகளுக்கும் மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதனை உறுதி செய்தல்.

(இ) முஸ்லிம் பாடசாலைகளின் மேற்பார்வையும், நிர்வாகமும்: கல்வி அமைச்சில் முஸ்லிம் பாடசாலைப் பிரிவை உருவாக்கி முஸ்லிம் பாடசாலைகளுக்குப் போதுமான நிர்வாக இயந்திரங்களை உறுதி செய்தல்.

முஸ்லிம் பாடசாலைகளுக்கென தனியான அமைப்பு பற்றி மகஜர்.

இன விகிதாசாரத்துக்கு ஏற்ப ஸ்ரீலங்கா கல்வி நிர்வாகச் சேவைக்கு முஸ்லிம்களை நியமனம் செய்தல்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

### அஸ்வர் வாழ்த்துகிறார்

முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வரின் செய்தி

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஆரம்ப காலமான 1963 டிசம்பர் முதல் 1964 செப்டம்பர் வரையிலான காலம்



முதல் நான் அதனோடு நெருங்கிய தொடர்புள்ளவனாக இருந்துள்ளேன்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் முயற்சிகளின் காரண

1964 செப்டம்பர் மாதம் 19, 20 ஆகிய திகதிகளில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் இரண்டு நாள் கூட்டம் நடைபெற்றது.

அந்த மாநாட்டின் போது நிறைவேற்றப்பட்ட 84ஆவது தீர்மானத்தின் நேரடி விளைவே நான் ஆரம்ப அங்கத்தவராகவும், முன்னாள் அதிகாரியாகவும் உள்ள தற்போதைய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடாகும்.

அன்று முதல் பெரும் வேகத்தில் வளர்ச்சியடைந்த அ இ மு க மா இன்று கல்வித் துறையில் முஸ்லிம் சமூகத்தின் காவலாளியாக இருக்கிறது.

தமது வெள்ளி விழாவின் போது அ இ மு க மா இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கான ஐந்தாண்டு திட்டமொன்றை செயல்படுத்த முற்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அ இ மு க மாநாட்டுக்காக முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சின் உதவியையும், எனது தனிப்பட்ட ஒத்து

### ஜாபிர் வாழ்த்து



சுகாதார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஜாபிர் ஏ காதரின் செய்தி:

### ஆளுநர் வாழ்த்து



தென் மாகாண ஆளுநர் அல்ஹாஜ் எம் ஏ பாக்கீர் மாக்காரின் செய்தி —

முஸ்லிம் கல்வியின் முக்கியத்துவம் பற்றி அதிகமாக வலியுறுத்திக் கூறப்பட வேண்டியதில்லை,

[illegible] முஸ்லிம் குழந்தைகளுக்கு மத உணர்வுடனான கல்வி மிக முக்கியமானது-

100 மில்லியன் ரூபா திட்ட இலக்கு பெரிதாகத் தெரிந்தாலும் தாராள மனப்பாங்கு உரியவர்களான வசதி படைத்த முஸ்லிம்களின் எல்லையை அது தாண்டியதாக இருக்க மாட்டாது-

பணிகளை நான் அறிவேன்.

இப்பணிகள் நாட்டுக்குப் பொதுவாகவும், முஸ்லிம் சமூகத்துக்குக் குறிப்பாகவும் அமைந்தன.

அ இ மு க மாநாடு ஒரு ஐந்து ஆண்டுத் திட்டத்தை தற்போது வகுத்துள்ளது.

முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் குடும்ப தொகுதிகள் தகவலும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புதலும்—

(ஆ) முஸ்லிம் பாடசாலைகள், ஆசிரியர் கல்லூரிகள், அரபுக் கல்லூரிகள் (மத்ரஸாக்கள்), அஹதிய்யா பாடசாலைகள் ஆகியவை.

(இ) சிங்கள/தமிழ் பாடசாலைகளிலும் மற்றைய நிறுவனங்களிலும் உள்ள முஸ்லிம் பிள்ளைகள்—

(ஈ) தொழில்கள்— வர்த்தகம், விவசாயம், கைத்தொழில், வெளிநாட்டுத் தொழில், தொழில் இல்லாதவர்கள் தொழிலில் இருப்போர் ஆகிய முஸ்லிம்கள்—

(உ) அறிக்கை திரட்டல்

4 முஸ்லிம் கல்வி நிறுவனங்களின் பதிவோடு மாவட்ட ரீதியாக முஸ்லிம் கல்வி வரலாறு

5 அரபுக் கல்வி வட்டாரங்கள்— 250 நிலையங்கள்

6 500 பாடசாலைகளில் தொழுகை அறைகள், வுளு செய்வதற்கான வசதிகள்—

7 சிங்கள/தமிழ்/ஆங்கில சொல் அகராதி இஸ்லாமிய (அரபு) அடிப்படையில் சமமானது

680 முஸ்லிம் பாடசாலைகளின் முதற்கட்ட துரித அபிவிருத்தி திட்டம்—

9 தொழில்நுட்ப பாடநெறிகள் உடன் கூடிய வழிகாட்டி கைநூல் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் வாய்ப்புகளுடன் கூடியது—

10 முஸ்லிம் பாடசாலைகளுக்கும் மஸ்ஜிதுகளுக்கும் சனசமூக விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை செய்யும் சிபார்சுகளைத் தெரிவிக்கு அமுல்படுத்தவும் 20 குழுக்கள்

(ஆ) அச்சகம்

13 அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுச் செயலகம் நூலகம் - தகவல் நிலையம்

## திட்டச் சுருக்கம்

எமது ஐந்தாண்டு திட்டம் பின்வரும் அபிவிருத்திகளை வழங்குகிறது.

680 அரசாங்க முஸ்லிம் பாடசாலைகளில் (நூலகம், தொழுகை அறை, வுளு செய்வதற்கான வசதிகள்)

1 முஸ்லிம், அரச உதவி பெறும் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலை (ஸாஹிராக் கல்லூரி)

2. முஸ்லிம் ஆசிரியர் கல்லூரிகள் (அட்டாளைச்சேனை, தர்கா நகர்)

1. சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி

59 அரபுக் கல்லூரிகள் (மத்ரஸாக்கள்)

பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களில் அரபு, இஸ்லாமிய கற்கைப் பிரிவுகள்.

250 அரபு கற்கை நிலையங்கள் முஸ்லிம் பகுதிகளில்

(அ) 1700 மஸ்ஜிதுகளிலும், அருகிலுள்ள சனசமூக நிலையங்களிலும், கிராம அபிவிருத்தி நிலையங்களிலும் நூலகங்கள்.

(ஆ) 1025 குர்ஆன் பாடசாலைகள்

(இ) அஹதிய்யா பாடசாலைகள் முழு இலங்கையிலும்

...கிய தொடர்புள்ளவனாக இருந்துள்ளேன்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் முயற்சிகளின் காரணமாக நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் சகல முஸ்லிம் கல்விமான்களிடையேயும் கல்வி தொடர்பான புத்துணர்வு ஏற்பட்டது.

இதன் இறுதி விளைவாகவே அ இ மு க மாநாட்டுக்காக முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சின் உதவியையும், எனது தனிப்பட்ட ஒத்துழைப்பையும் வழங்க உறுதி அளிப்பதோடு இந்த பாராட்டுக்குரிய திட்டத்தின் வெற்றிக்காக தூய அருளை வழங்குமாறு சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வை பிரார்த்திக்கிறேன்.

...குறிப்பிலிருந்து அதன் பணிகளின் முக்கியத்துவத்தை உணரலாம்.

(அ) சமய சுற்றாடலும், கலாசாரத் தனித்துவமும்: அரசாங்க முஸ்லிம் பாடசாலைகளின் அந்தஸ்தைப் பாதுகாத்தல். இஸ்லாம் போதனை, அரபு மொழி இஸ்லாமிய வரலாறு, நாகரிகம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் ஆகியவற்றை முன்னேற்றுதல்.

(ஆ) முஸ்லிம் பாடசாலை

சுகாதார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஜாபிர் ஏ காதரின் செய்தி:

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுடன் நான் 1964ஆம் ஆண்டு முதல் பங்கு பற்றி வருகிறேன்.

1956 - 1959ஆம் ஆண்டுகளில் அதன் தலைவராகவும் பணியாற்றியுள்ளேன்.

கல்வித் துறையில் இந்த மாநாடு ஆற்றிய மிகச் சிறந்த

அ இ மு க மாநாடு ஒரு ஐந்து ஆண்டுத் திட்டத்தை தற்போது வகுத்துள்ளது.

கடந்த இரண்டரை தசாப்தங்களில் பெற்ற ஆய்வுகள், அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு இது அமைகிறது.

இத்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்துக்குச் சகல பிரிவுகளில் இருந்தும் ஆதரவு கிடைக்குமென்பது நம்பிக்கையாகும்.

# இதோ ஓர் அன்பான வேண்டுகோள்

(அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு)

இலங்கையிலுள்ள முஸ்லிம் குழந்தைகளின் முழுமை படைத்த தன்மையின் அபிவிருத்தியை இலக்கு கொண்டே அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிகழ்ச்சிகள் அமைகின்றன. 1700 பள்ளிவாசல்களுக்கும், 59 அரபுக் கல்லூரிகளுக்கும், 1025 குர்ஆன் பாடசாலைகளுக்கும் மற்றும் பல அஹதிய்யா பாடசாலைகளுக்கும் நூலக வசதிகளை வழங்கவும் நாம் கருதியுள்ளோம்.

எமது திட்டம் இன்ஷா அல்லாஹ் நகரிலும், பட்டணத்திலும், கிராமத்திலும் உள்ள முஸ்லிம் சமூகத்தைச் சென்றடைய வேண்டும்.

அதன் மூலம் விலைமதிக்க முடியாத கொடையான கல்வியை இலங்கையிலுள்ள முஸ்லிம் சனத்தொகையில் சகல பிரிவினரும் அனுபவிக்க வேண்டும் என்பதாகும்.

எமது இலக்கு நூறு மில்லியன் ரூபாவாகும்.

இது ஒரு பெரிய தொகையாகும்.

இந்த நிலையில் இஸ்லாமிய கலாசாரம், மதம் ஆகியவற்றின் பாதுகாப்பு, ஊக்குவிப்பு, அரபுக் கல்வி ஊக்குவிப்பு, முஸ்லிம்



கோட்பாடுகளின் ஊக்குவிப்பு ஆகியவற்றுக்கு செல்வந்த முஸ்லிம்களுக்கு இது ஒரு சிறிய தொகையாகும்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஓய்வு கொள்ளாமல் தியாக சிந்தையுடன் இஸ்லாத்தின் இந்த உயரிய கோட்பாடுகளை நிலைபெறச் செய்யப் பாடுபட்டு வருகிறது.

ஒரு சகோதர முஸ்லிமுக்கு உதவுவதில் இருந்தும் மற்றொரு முஸ்லிம் முகத்தைத் திருப்பிக் கொள்ள முடியாது.

சிறப்பிதழ் தயாரிப்பு— எப் எம் பைரூஸ்

கோட்பாடு இல்லாத ஓர் எதிர்காலத்துக்குத் தயாராவதில் இருந்தும் முழு சமுதாயத்தையும் பாதுகாக்க இதோ ஒரு அரிய வாய்ப்பு கிட்டி உள்ளது.

ஆகவே இந்த வாய்ப்பு நன்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் பெருமை மிக்க வரலாறு அதன் ஆளுமைக்குத் தகுந்த சான்றாகும்.

உங்கள் உதவியுடன் முஸ்லிம் உரிமைகளைத் தொடர்ந்தும் பாதுகாக்கக் கூடியதாக இருக்கும்.

(முதலில் கொடுப்பவருக்கு அவன் இரு முறை கொடுக்கிறான்)

எஸ் எல் எம் ஷாபி மரிக்கார்
தலைவர்
அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு

குறிப்பு— உங்கள் காசோலைகளை All Ceylon Muslim educational conference "A/C payee" (Bank of Ceylon City Office) என்று குரொஸ் பண்ணி எழுதி அல்ஹாஜ் முகம்மது செய்ன் ஜே பீ எம் எம் சீ கௌரவ பொருளாளர், அ இ மு க மா இல 10 பீரிஸ் வீதி, கல்கிஸ்ஸை என்ற முகவரிக்கு தயவுடன் அனுப்பி வையுங்கள்.

# ஹலீம் இஷாக் வாழ்த்து

ஜனாப் எம் ஹலீம் இஷாக் எம் பி விடுத்துள்ள செய்தி—

முஸ்லிம் கல்வி மாநாடு அதன் வெள்ளி விழாவைத் தொடரும் இவ்வேளையில் உத்தேச ஐந்தாண்டுத் திட்டம் பாராட்டத்தக்க பெறுமதி மிக்க ஒரு திட்டமாகும்—

கல்வித் துறையில் சமூகத்துக்கும், நாட்டுக்கும் தொடர்ந்தும் சேவை புரிய இத்திட்டம் வழிகோலும்—



புனிதமிகு ரமழான் மாதத்தில் புனித "லைலத்துல் கத்ர்" இரவில் இந்த திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்—

இந்நாட்டில் முஸ்லிம் கல்வி முன்னேற்றத்தை விரும்பும் எவரும் இத்திட்டம் மூலம் சமூகத்துக்கும், நாட்டுக்கும் கிடைக்கும் நன்மைகளை குறைவாக மதிப்பிட முடியாது—

இந்த குறிப்பிடத்தக்க திட்டத்துக்கு எதிர்பார்க்கும் பொது மக்களின் ஆதரவு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுக்குக் கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை—

அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக!

## கரீம் ஆசி

முஸ்லிம் கல்வி அபிவிருத்திக்கு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஆற்றியுள்ள பெறுமதிமிக்க சேவைகளை சமுதாயமும் நாடும் நன்றியுடன் ...

ஐந்தாட்டுத் திட்டம் ... அங்குரார்ப்பணம் செய்யப்படுவதானது சரியான ... முன்னணி நடவடிக்கையாகும்.

கோட்பாடு ... முயற்சிகள் அல்லாஹ்வின் துணையுடன் வெற்றி பெற ...

உங்களுடைய பெரிய முயற்சிகள் பாராட்டுக்குரியவை ... வெகுமதி கிட்டும்— இதுவே சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் எதிர்பார்ப்பதாகும்—

எம் ஏ கரீம்,
தலைவர்—
சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்

— ரப்பி ஸித்னி இல்மா — இறைவா எனக்கு அறிவைப் பெருகச் செய்தருள்வாயாக!

## முஸ்லிம் கல்வி...

[5-ஆம பக்கத் தொடர்ச்சி]

(ஈ) பல்கலைக்கழக பிரவே சம: பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசம பெறும முஸ்லிம மாணவர்களின் எண்ணிக் கையை அதிகரித்தல்; பிரச்சினை களைத் தீர்த்தல்.

(உ) கட்டணம அறவிடாத பாடசாலைகளுக்கு அரச உதவி: கட்டணம அறவிடாத பாடசா லைகளுக்கு நிதி உதவி வழஙகு வதை உறுதி செய்தல்.

தகுதி பெற்ற சகல ஆசிரியர் களுக்கும நன்கொடை வழஙகு தல்.

(ஊ) ஆசிரியர்களின் தொழில் சார்பு முன்னேற்றம: பயிற்சிப் பட்ட ஆசிரியர்களை உயர் தரத் தில் சமமாக வைத்திருத்தல், பயிற்றப்பட்ட பட்டதாரிக ளுக்கு தனிப்பட்ட தரம்-

முஸ்லிம விதவை ஆசிரியை களுக்கு முழுச் சமபளத்துடனான "இத்தா" லீவு வழஙகுதல்.

பத்தாண்டுகளுக்குக் கூடுத லான சேவை உள்ள மூன்றாம் வகுப்பு அதிகாரிகளை எழுத்துப் பரீட்சை இன்றி இரண்டாம வகுப்புக்கு பதவி உயர்த்துதல், தொண்டர் ஆசிரியர்களை பயிற்றி ஆசிரியர்களாக ஆக்கப் பண்ணுதல்.

கல்வி டிப்ளோமா நெறிகளைப் பின்பற்ற பட்டதாரி ஆசிரியர் களுக்கு சமபளத்துடன் கூடிய விடுமுறை.

(எ) தேசியக் கல்வி முறையில் மாற்றஙகளை அறிமுகம செய் தல்:

கல்வி நிலைமை தொடர்பாக அகில இலஙகை முஸ்லிம கல்வி மாநாடு தொடர்ச்சியாக தொடர்பு வைத்தே வருகிறது.

கல்வித்துறை மாற்றஙகள் தொடர்பாக முஸ்லிமகளுக்கு எப்போதும அறிவித்தே வருகி றது.

கருத்துக்களை தெரிவிக்க முன்னர் மாவட்ட மாநாடுகள், கருத்தரஙகுகள் நடத்தப்பட்டு முஸ்லிம மக்களின் அபிப்பிரா யஙகள் திரட்டப்படுகின்றன. உதாரணம:

1964, 1966ஆம ஆண்டுகளின் வெள்ளை அறிக்கைகள். 1963 ஆம ஆண்டின் நாடாளுமன்ற தெரிவுக் குழு. 1972ஆம ஆண் டின் சீர்திருத்தஙகள். 1978ஆம ஆண்டில் பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்தஙகள். 1979ஆம ஆண்டின் கல்விச் சீர்திருத்தஙகள் குழு. 1982ஆம ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கை.

1984, 1987ஆம ஆண்டுகளின் பல்கலைக்கழக பிரவேச கொள்கை மீளாய்வுக் குழுக்கள்.

(ஏ) [illegible]

# கல்வி மாநாட்டின்

# நிர்வாகிகள் பட்டியல்

தலைவர்- டாக்டர் எம எச் எம அப்துல் காதர், உபதலை வர்- ஜனாப் எம எச் ஆமித், எம பி அவைத் தலைவர்- ஜனாப் எஸ் எல் எம ஷாபி மரிக் கார், பிரதி அவைத் தலைவர்- ஜனாப் எம ஏ எம யூசுப், உப அவைத் தலைவர்கள்- ஜனாப்கள் எஸ் எம எம அப்துல் கபூர், எம டி இச்கிலான், ஐ எல் எம சுஹைப், கௌரவ பொதுச் செய லாளர்- ஜனாப் ரீ எம அப்பாஸ்.

கௌரவ பொதுப் பொருளாளர்- ஜனாப் எம ஸெய்ன், உதவிச் செயலாளர்கள்- ஜனாப்கள் ஏ எம நவீர், மற்றும எம லாபிர் காஸிம, உதவிப் பொருளாளர்- ஜனாப் எம எல் எம பாருக், ஆசிரியர் குழு- தலைவரும ஆசிரி யரும (தமிழ்)- ஜனாப் எஸ் எம கமால்தீன் ஆசிரியர் (சிஙகளம), ஜனாப் ரீ எம அப்பாஸ் ஆசிரியர் (ஆஙகிலம), ஜனாப் எஸ் பி சி ஹலால்தீன்-

### நிறைவேற்று சபை

கௌரவ எம எச் முஹம்மது எம பி, கௌரவ ஏ சி எஸ் ஹமீது எம பி, கௌரவ ஏ ஆர் மன்சூர் எம பி, கௌரவ எம ஏ பாக்கீர் மாக்கார், ஆளுநர் தென்

மாகாணம கௌரவ எம எல் எம அபூசாலி எம பி, கௌரவ எம ஜாபிர் ஏ காதர் எம பி, கௌரவ இமதியாஸ் அப்துல் பாக்கீர் மாக்கார் எம பி. கௌரவ ஏ எச் எம அஸ்வர்எம பி, கௌரவ எம ஈ எச் மஹ்ரூப் எம பி, கௌரவ யூ எல் எம பாருக், எம பி, ஜனாப்கள் எம ஏ அப்துல் மஜீத் எம பி, எம ஹலீம இஷாக் எம பி, எஸ் ஏ ஏ அப்துல் மஜீத் எம பி, ஏ ஆர் எம அப்துல் காதர் எம பி, எம எச் எம அஷ்ரப் எம பி, என் எம புஹார்தீன் எம பி, எஸ் என் எம அபூபக்கர் எம பி, எம ஆலிம முஹம்மது ஹிஸ்புல்லாஹ் எம பி, பஷீர் சேகு தாவூத் எம பி, ஏ பஷீர் அஹ்மத் எம பி, எம எஸ் மஹ்ரூப் எம பி-

### மாவட்ட [illegible]நிதிகள்

ஜனாப்கள்- ஏ எச் எல் ஷ ஷமீம, ஏ காதர் எம அலி, ஏ டபிள்யூ எம ராஸிக் மரிக்கார், ஏ ஆர் எம ஸெய்ன், ஜெஹான் கே காஸிம, என் எஸ் எம தௌஜூ, பீ எஸ் அப்துல்லா, எம எம அபதுல் காதர், ஏ எல் எம ஹாஷிம, ஏ எல் எம யூசுப். மௌலவி ஏ எல் எமஇப்றாஹீம ஜனாப்கள்- எம ஐ அமான், ஏ ஆர் ஏ நூர் அமீன், ஏ எல் எம இஸ்மாயில் ஏ சி எம ஏ மசூத் எஸ எச் ஏ வதூத், எம கே எம மஹ்ஸூம, யூ எல் தாவூத், எஸ் ஜே சுலைமான, ஓ எல் எம இஸ் மாயில், எஸ் எம ஏ ஜமால்தீன்,

ஏ எல் எம தாஹா, எம நவீர், எஸ் ஏ ஆர் எம பாருக், டாக்டர் ஜனாபா எஸ் என் பாஸி, ஜனாப் கள் எஸ் இஸட் எம மசூர் மௌலானா, ஏ எல் சாய்புகண்டு, ஏ என எம ஷாஜஹான், ஏ எம ஐ ஷஹீத், எம எம ஹலால் தீன், எம எஸ் அப்துல் மஜீத், டாக்டர் ஹமீத், ஏ அஸீஸ்,

ஜனாப்கள் எஸ் எம இல்யாஸ், எஸ் எச் எல் அலியார், எம ஏ எம ஷபீக், எம எல் எம ஜலீல், எஸ் எம ஏ ஹஸன், எச் ஏ முத் தலீப், எம அபூபக்கர், ஏ எம அப்துல் கரீம, எம ஏ லதீப், டாக் டர் எம ரீ அப்துல்லா. ஜனாப் கள் எம எம ஹலால்தீன் மற் றும எச் எம எம அப்துல் காதர்-

### உத்தியோக பற்றற்ற மற்றும் பதவி வழி உறுப்பினர்

ஜனாபா எச் எம காலித், ஜனாப்கள் ஆர் பின்ஹசன் பீ டீ எம மொஹிதீன் யூ எல் எம் பாருக, ஏ எம முஹம்மது ரஊப், எஸ் பி சி ஹலால்தீன் செய்யித் ஏ மௌலானா. மன்சூர் எஸ் தின்,மகு என் எச் காலிதீன் அலா நிதி பதியுத்தீன் மஹ்மூது, ஜனாப் கள்- ஏ அஸீஸ், எம எம ஏ குத் தூஸ், எம ஷரீப், எம எம மன் சூர், ஐ எம எஸ் எம பஸீல் மௌலானா. எம ஏ சி எம ஜிப்ரி,

கே எல் சின்னலெப்பை, எம ஐ எம ஷெரீப், டாக்டர் எம சி எம கலீல், ஜனாப்கள் எம எச் அஹ்மத் சயீத், கே எம அபூபக் கர். ஏ ஆர் எம ஏ காதர், ஜனாபா எச் கமால்தீன், மௌ லவி எம எச் எம ஜவுபர். எம பாயிஸ் டாக்டர் எம எஸ் எம் ரிபாய். எம அபூபக்கர். எஸ் எம ஏ ஜப்பார். ஏ இஸட் ஓமர்தீன்,

அதிபர் அரசாஙக ஆசிரியர் பயிற் சிக் கல்லூரி அட்டாளைச் சேனை, அதிபர் அரசாஙக ஆசிரி யர் பயிற்சிக் கல்லூரி, தர்கா டவுன். எஸ் எச் எம ஜமீல். எம ஏ எம சமசுதீன், முகதார் ஏ முஹம்மது, இஸட் ஏ ரஹீம, எம சாஹுர் சூபி, இஸ்மாயில், எஸ் எம பி மொஹிதீன், .....ரி இப்றா லெப்பை, எம எச் எம சிராஜி, எம எம நிஸாம, எம லை எம முஸ்லிம, ஏ எம முஸ்த கீம- எம எச் எம சுஹைதீன், என் எம ஜிப்ரி, எம என் ஓமர் மிஹ் லார், ஏ பி எம சலீம, எஸ் எச் இஸ்மாயில், ஏ எல் ஜெய்னுதீன்,

எம ஏ பாருக், பீ ஹபீல், ஏ எம ஓமர் லெப்பை, பீ எம எஸ் மரிக் கார் [illegible]

எம தாஹா மகுதூர் ஏ மஜீத் எம ஏ எம சாடிதீன் எம ஐ உதுமாலெப்பை (முன் னாள் எம பி) டாக்டர் ஏ எம எம சஹாப்தீன். பேராசிரியர் எம மஹ்ரூப் இஸ்மாயில், எம எச் எம நைனா மரிக்கார், டாக் டர் எம காமில் அஸாத்-

அ இ மு க மா மாவட்டக் கிளைகள்

கொழும்பு- தலைவர் ஜனாப் சுஜப் ஏ காதர், அவைத் தலை வர் ஜனாப் எஸ் எம கமால்தீன், கௌரவ செயலாளர் ஜனாப் எம ஆர் எம பாருக், கௌரவ உதவிச் செயலாளர் [illegible] தௌபிக் ஹசன், கௌரவ பொருளாளர் மௌலவி எம ரீ ஏ ஆரிப்-

அம்பாறை தலைவர்- ஜனாப் ரீ இப்றாலெப்பை, அவைத் தலைவர் ஜனாப் எம வை எம் சித்திக் கௌரவ செயலாளர் ஜனாப் எம சி ஆதம்பாவா, பொருளாளர் ஜனாப் ஐ ...எம இஸ்ஸதீன்,

இரத்தினபுரி தலைவர்- ஜனாப் ஏ ஜே எம இஸ்மாயில் பாருக், பொதுச் செயலாளர்- ஜனாப் எம எச் எம யெஹியா, பொரு ளாளர்- ஜனாப் எம எஸ் ...எம சனூன்-

மன்னார் அவைத் தலைவர்- ஜனாப் எஸ் ஏ ரஹீம, செயலா ளர்- ஜனாப் எம ஏ அன்சாரி, பொருளாளர்- ஜனாப் எம சி அமானுல்லா-

### செயற்பாட்டு குழு

அல்ஹாஜ் கௌரவ ஏ எச் எம அஸ்வர், எம பி, ஜனாப்கள் எம எச் ஆமித், எம பி, எஸ் எல் எம ஷாபி மரிக்கார், எம ஏ எம யூசுப். எஸ் எம எம அப்துல் கபூர், ரீ எம அப்பாஸ். எம ஸெய்ன், எம லாபிர் காஸிம. எம எல் எம பாருக், எஸ் எம கமால் தீன், எஸ் பி சி ஹலால்தீன்,

எஸ் இஸட் எம மசூர் மௌலானா. எம ஐ அமான் ஏ சாய்புகண்டு, எம ஷரீப், ஏ எம துஹியா, ரீ எம ஐ கௌஸ் எம ஸாஹிர் சூபி இஸ்மாயில். எம தௌபீக் ஹசன், எம பைசால்

### பஸ்லி நிஸாரின் ஆசி



வந்துள்ளது-

கல்வி மேமபாட்டில் முஸலிம களும, சோனகர்களும அவ்வள வாக ஆர்வம செலுத்தி வர வில்லை ஆனாலும "இல்ம" முன் னேற்றத்துக்கு அவசியமாகும- இன அடிப்படையின் வழிவந்த ஒரு தேசிய முஸ்லிம நிறுவனத் தின் தலைவரான நான் பெறுமதி மிக்க கல்விக்கான 100 மில்லியன ரூபாவுடனான ஐந்தாண்டு திட் டத்தின் வெற்றிக்கு வல்ல அல்

## உறுதியான அடிப்படை எமது முன்[illegible]ற்றம்

உறுதியான அடிப்படையி யிலேயே நாம கட்டி எழுப்பப் படுகிறோம

கல்வி, உயர் கல்வி அமைச்சு, மற்றும தொடர்புடைய நிறுவ னஙகள், இயக்கஙகள் ஆகியவற் றின் இணைப்புடன் இன்ஷா அல்லாஹ் எமது ஐந்தாண்டு திட்டம நடைமுறைப்படுத்தப் படும.

எமது கிட்டம கல்வி அமைச் சின் நிதியின் ஆகக் குறைந்தது 8 வீத தொடரான ஒதுக்கீட்டில் தான் தஙகியுள்ளது.

இது முஸ்லிம பாடசாலை களுக்குரிய காணிச் சுவீகரிப்பு, புதுக் கட்டிடம, விஞ்ஞான ஆய்வு கூடஙகள், தொழில் நுட்ப தொழில் கூடஙகள், மற்றும உபகரணஙகள், தள வாடஙகள், நூலகஙகள், விளை யாட்டு மைதானஙகள் ஆகியவற் றக்கு முன்னுரிமை அடிப்படை யில் முஸ்லிம பாடசாலைப் பிரி வினால் தீர்மானிக்கப்பட வேண் டியதாகும.

அமைச்சின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றம பொறு ப்பை அமைச்சின் நிதி ஒதுக்கீட் டைப் பெறும மாகாண சபைகள் பெறுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தமது பன்முக வரவு – செலவு நிதி ஒதுக்கீட்டில் இருந்து கிட்டஙக ளுக்காக வழஙகும நிதியிலேயே நாடு முழுவதிலும உள்ள முஸ் லிம பாடசாலைகள் கடந்த காலஙகளைப் போன்று தஙகியுள் ளன.

மத்திய, மாகாண அரசின் தொடரான நிதி கிடைப்பதன் மூலமே எமது முழுத் திட்டமும வெற்றி பெற வேண்டியுள்ளது. மத்திய, மாகாண அரசுகளின் தொடரான நிதியும, நல்லெண் ணமும இன்றி தனிப்பட்ட எந்த ஒரு நிறுவனமும அதன் திட் டஙகளை நடைமுறைப்படுத்திச் செல்ல முடியாது.

எமது திட்டஙகள் வீணில் போக முடியாது.

எமது திட்டஙகள் தொடரான கல்வி வளர்ச்சித் திட்டஙகளா கும.

எமது முன்னைய தலைவர்கள் இதனை வழிநடத்தி வந்திருக்கி றார்கள்.

எமது மாபெரும தலைவர் களின் ஞானம, அர்ப்பணம, சுய தியாகம பேணுதல் ஆகியவை மூலமே முஸ்லிம சமூகம சகல மனித முயற்சிகளிலும மேலோ ஙகி உள்ளதென்பதை அகில இலஙகை முஸ்லிம கல்வி மாநாடு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

அவர்கள் இட்டுச் சென்ற உறுதியான அடித்தளமே எமது எதிர்காலத் திட்டஙகளை இலகு படுத்த எமக்கு உறுதி செய்துள் ளது.

## நஜிமுத்தீனின் செய்தி



தேசிய வை எம எம ஏ கவுன் சிலின் தேசியத் தலைவர் ஜனாப் ஏ ஆர் நஜிமுதீன் விடுத்துள்ள செய்தி —

சமுதாயத்துக்குச் சேவை புரிய தெரிந்தெடுத்த ஒரு துறையில் கால நூற்றாண்டு காலமாக அகில இலஙகை முஸ்லிம கல்வி மாநாடு செய்துள்ள பணிகள் அதன் திறமைகளுக்கும, தியா கத்துக்கும தகுந்த உதாரணமா கும-

இதன் பெயர் முஸ்லிமகளின் கல்வித் துறை அபிவிருத்திக்கும, வளர்ச்சிக்கும பாடுபடுவதையே குறிப்பிடுகிறது-

## வெற்றிகரமாக எதிர்நோக்கப்பட்ட பல சவால்கள் இதோ

கொள்கை மீளாய்வுக் குழுக்கள்.

(ஏ) முஸ்லிம நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு:

அ இ மு க மாநாட்டின் செயற் கவுன்சிலில் சகல முஸ்லிம எம பிமார்களும கட்சி அரசியலுக்கு அப்பால் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பிரச்சினைகள் சுமுகமாக ஆராயப்படுகின்றன.

முஸ்லிம நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூகத்தைப் பாதிக்கும பிரச்சினைகள் தொடர்பாக அரசின் கவனத்தை திசை திருப்பக் கூடியதாக இருக்கிறது.

அகில இலங்கை முஸ்லிம இயக்கங்களின் கருத்துக்கள் காலத்துக்குக் காலம பெறப்படுகின்றன.

தேவைகள் ஏற்படும போத இந்த இயக்கங்களின் பிரதிநிதிகள் செயற்குழுக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு வருகின்றனர்.

## முஸ்லிம்...

[1ஆ பக்கத் தொடர்ச்சி]

எமது பணிகளுக்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும.

இவ்வாறு முஸ்லிம கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைர் ஜனப் எஸ் எல் எம ஷாபி மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து முஸ்லிம ராஜாங்க அமைச்சர்களும, பிரமுகர்களும ஆசிச் செய்திகளை வெளியிட்டிருக்கின்றனர்.

முன்னணி முஸ்லிம இயக்கங்களின் தலைவர்களும இத்திட்டத்தின் வெற்றிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்

தைஅழ ஒடுவேித்ச்த்ப்ல்ப தசச்ா

(ண-007)



அகில இலங்கை சோனகர் சங்கத் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம பஸ்லி நிசாரின் செய்தி —

முஸ்லிமகளின் கல்விப் பிரச்சினைகளில் அகில இலங்கை முஸ்லிம கல்வி மாநாடு கடந்த 25 ஆண்டுகளாக முன்னணியில் திகழ்ந்து வந்துள்ளது-

ரூபாவுடனான ஐந்தாண்டு திட்டத்தின் வெற்றிக்கு வல்ல அல்லாஹ் அருள்பாலிக்க வேண்டுமென்றும வழிகாட்ட வேண்டும என்றும பிரார்த்தனை செய்கிறேன்-

இந்த மேலான முயற்சிக்கு 50 ஆண்டு வரலாறு கொண்ட எமது தேசிய நிறுவனம அதன் பூரண ஆதரவையும, ஒத்துழைப்பையும வழங்க விருப்பம பூண்டுள்ளது-

நிஸார்
தலைவர்-

## ஹஸன் வாழ்த்துகிறார்

முஸ்லிம எழுத்தாளர் தேசியக் கவுன்சிலின் தலைவர் ஜனாப் கே எம் ஏ ஹஸன் விடுத்துள்ள செய்தி —

அகில இலங்கை முஸ்லிம கல்வி மாநாட்டின் நடவடிக்கைகளைப் பற்றி எல்லோரும அறிவார்கள்.

இந்த நாட்டில் முஸ்லிமகளுக்கு சேவை செய்வதற்கென தாம தெரிவு செய்துள்ள துறையில் அது சிறந்த சேவையை ஆற்றியுள்ளது.

அதன் வெற்றிகள் அழியாதவை.

தமது இலக்குகளையும, லட்சியங்களையும அடைவதற்காக மாநாடு மேலும நீண்ட தூரம செல்ல வேண்டியிருக்கிறது.

முஸ்லிம புத்திஜீவிகள் எதிர் வரும ஆண்டுகளில் அ இ மு க மாநாட்டின் மூலம மேலும பலவற்றை எதிர்பார்க்கின்றனர்.

இந்தக் கனவை நனவாக்க அல்லாஹ் இந்த அமைப்புக்கு உதவி புரிவானாக.

முஸ்லிம சமூகத்தின் மேமபாட்டுக்காக இந்த மாநாட்டின் அபிவிருத்திக்கும முன்னேற்றத்திற்கும தமமால் இயன்ற வகையில் பங்களிப்பை வழங்குவது எமது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு படித்த ஆணினதும பெண்ணினதும தலையாய கடமையாகும.

சகல வெற்றிக்காகவும நான் பிரார்த்திக்கிறேன்.

ஓமர் லெப்பை, பி எம எஸ் மரிக்கார், ஏ எம இஷாக், ஏ சி ஏ எம ஜிப்ரி, எம ஆர் எம ஹுசைன், மௌலவி எஸ் எம ஏ எம முஸம்மில், ஜனாப்கள் எம ஏ எம ஷாபிதின், எம எம சம்சுதீன் எம சரூர், எம சஹாப்தீன் எம ஏ காதர் மொஹிடீன் எம ஐ மீரா லெப்பை, கே எல் அபூபக்கர் ௭ல வ் வை,

மௌலவி ஏ எம மயூம, ஏ ஆர் எம ருஹுல் ஹக், மௌலவி ஏ எம எம கௌஸ் ஏ ஆர் எம புவாது ஏ எச் எம் மஹிலார் மௌலவி எம ஜே எம றியாழ் மௌலவி ஜே எஸ் கே ஏ ஏ எச் மௌலானா வ க அ மௌலவி எஸ் எச் எம ஜவுபர், ஜனாப்கள் எஸ் எம ஏ ஹசன், ஏ ஏ எம எம சமசுதீன்,

ஏ டபிள்யூ ஏ அஜ்வாத், ஏ ஆர் ஏ ஜலீல், எம ஜே உமறுலெப்பை, யூ எம எம அஷ்ரப், ஓ எச் ஆப்தீன், எம சி இஸ்மாயில், எம மஹ்மூத் லெப்பை. கே யூ ஷெரீப், ஐ எம கே ஏ மரிக்கார், கலாநிதி பி ஏ ஹுசைன்மியா. ஜனாப்கள் ஐ எம தாஹிர், எம அப்துஸ் சத்தார், ஏ எஸ் எச் நவுபர், எம இஸட் எம லாபிர், எம ஏ கனி, ஜே ஏ அஸீஸ், ஐ

ஸாஹிர் கூபி இஸ்மாயில், எம தௌபீக் ஹசன், எம பைசால் பலீல், மௌலவி எம ஜே எம றியால், பணிப்பாளர், முஸ்லிம பாடசாலைகள் பிரிவு ஜனாப் எம பி எம ஷிப்லி மௌலவி,

எம ரீ ஏ ஆரிப், ஜனாப்கள் எம ஆர் ரஷாத், எம எம ராஸிக், ரீ சி எம ஜாயா, கே சி அஹ்லிப், ஏ எம முஸ்தகீம மௌலவி எஸ் எல் எம ஜவுபர், ஏ எம ஹாஷிம செயலாளர் முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சு, எம எம ஏ ரிஸா,

டாக்டர் ஏ எம எம சஹாப்தீன், எம என் மிஹ்ராஜ், எல் எஸ் கூதின், ஏ சி எம ஷபீக். மஸாஹிம மொஹிதீன், ஏ ஜீ ஹுசைன் இஸ்மாயில், எஸ் ஏ எச் மொஹிதின், எம எச் அபூ உபைதா-

ஏ ஜாவிட் யூசுப், எம சீ எம சரூக், எம ஷுஐப் ஏ காதர். கே எம ஏ ஹஸன, மௌலவி ஏ ஜல் எம இபுறாஹீம, டாக்டர் எம எம உவைஸ், ஏ எம ஷாஹுல் ஹமீத், எச் எம ஸுஹைர், மௌலவி எஸ் எம ஏ எம முஸமமில், அல்ஆலிம ஏ ஆர் எம சரூக், எம ஐ கே மொஹிதீன், எம எம அபுல் கலாம, ஜே எம எம ராஜீ,

எம எஸ் அல்லாபிச்சை, எம எம எம அப்துல் காதர், எம எம ஸாலிஹ், ஆர்கில் ஏ சபூர், எஸ் எஸ் இஸ்ஸதீன், எம ஏ மொகமட், ஏ ஆர் மொகமட், எம ஜே ஏ ரஹீம. பிரிகேடியர் டீ எஸ் டீ சாலி, எஸ் எம ஹனீபா, ரஷீட் எம ஹபீல், எம வை எம யாகூத், எம அப்துல் வாஹிட், எஸ் எம ஆர் சூதின், எஸ் ஐ எம எச் கரீம. மௌலவி ஏ ஆர் எம ரூஹுல் ஹக், ஏ சீ ஏ கபூர்.

## மன்னிப்பு — சுவனவாசம்

நபியே நிச்சயமாக உமது இறைவன் எவர்கள் தங்கள் அறியாமையினால் பாபத்தைச் செய்து விட்டு அதன் பின்னர் அதில் இருந்து விலகி நற்கருமங்களைச் செய்து சீர்திருத்திக் கொள்கிறார்களோ, அவர்களை அல்லாஹ் மன்னிக்கிறான்-

நிச்சயமாக உமது இறைவன் மிக்க மன்னிப்போனும கிருபை புரிவோனுமாக இருக்கிறான்-

(16-119)

நன்மை செய்தவர்களுக்குக் கூலி நன்மைதான்-

அவர்கள் செய்வதை விட அதிகமாகவும கிடைக்கும-

அதனால் அவர்கள் மிக்க ஆனந்தம அடைந்தவர்களாக இருப்பார்கள்-

அவர்கள் முகங்களைக் கவலையோ அல்லது இழிவோ சூழ்ந்து கொள்ளாது-

நிச்சயமாக அவர்களே சுவனவாசிகள் அவர்கள் அதில் என்றென்றும தங்கிடுவர்- (10-26)

## பல சவால்கள் இதோ

அகில இலங்கை முஸ்லிம லீக் கல்வி மாநாடு அல்ஹம்துலில்லாஹ்! ஏனைய இயக்கங்களுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் கடந்த இருபத்தைந்து வருட காலத்தில் அ இ மு க மா வெற்றிகரமாக எதிர்நோக்கிய சவால்கள்-

1 முஸ்லிம பெருமபான்மை பாடசாலைகளை அரசாங்க முஸ்லிம பாடசாலைகளாக வகைப்படுத்தலை ஒழிக்கும அச்சுறுத்தல்-

2 கல்வித்துறை டிப்ளோமா பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான உயர்ந்த சமபளத் திட்டத்தை நீக்குதல்

3 பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தனியான சமபளத் திட்டத்தை கீழ் மட்டத்தில் சமப்படுத்தும அச்சுறுத்தல்-

4 க தே போ த பரீட்சைக்கு "முஸ்லிம நடனத்தை" புதிய பாடமாக அறிமுகப்படுத்துதல்-

5 தே பொ க த பரீட்சையில் (க பொ த சா த பரீட்சைக்கு பதிலாக அமைந்தது) மற்றும பாடசாலை பாடத்திட்டத்தில் இருந்து அரபு மொழி நீக்கப்படல்-

6 க பொ த உ/த பரீட்சைக்கு பதிலாக அமைத்த க உ தே த பரீட்சையில் சோஷலிசத்தின் அடிப்படைகள் என்ற பாடம கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தலும, இந்த பாடத்திற்கு மாற்றாக சமய பாடத்தை சேர்க்க மறுத்தலும-

7 கட்டணம அறவிடாத தனியார் பாடசாலைகளை நடத்தும சமய நிறுவனங்களுக்கு அரசாங்க நிதி உதவி வழங்குதலோ அல்லது கட்டணம அறவிடும உரிமையோ மறுக்கப்படல்-

8 க பொ த சா/த பரீட்சைக்கான பாடப் பட்டியலில் இருந்து "சமயம" நீக்கப்படல் 1981 வெள்ளை அறிக்கை பந்தி 29-

9 சமயக் கல்வி தொடர்பான விசேட குழுவின் 1981 சிபார்சுகள் அமுலாக்கப்படாமை-

10 கல்வி அமைச்சில் சமயப் பிரிவு ரத்துச் செய்யப்பட்டமையும, கல்விப் பணிப்பாளர் (சமயக் கல்வி) பதவி ஒழிக்கப்பட்டமையும-

11 கல்வி அமைச்சில் இருந்த "முஸ்லிம பாடசாலைகள்" பிரிவு ஒழிக்கப்பட்டமை-

12 ஐந்து அமைச்சு சமய ஆலோசனைக் குழு ஒழிக்கப்பட்டமை (1982 முதல்)

13 பட்டதாரி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி டிப்ளோமா பாடநெறிகளை கற்பதற்காக சமபளத்துடனான விடுமுறை வழங்க மறுத்தமை-

14 1988 மார்ச் மாதம பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச மொத்த தகுதிப் புள்ளியை 180 இலிருந்து 200 ஆக உயர்த்தலும கல்வியில் குறைவான சிறப்புரிமைகளை பெறும 5 மாவட்டங்களுக்கான பங்குரிமையை ரத்துச் செய்யவும, பாடசாலைகளுக்கும, பெற்றோர்களுக்கும போதிய முன் அறிவித்தல் வழங்காமல் 1988/1989 முதல் க பொ த உ/த பரீட்சைகளில் இருமுறைகள் மாத்திரம தோற்ற இடமளிக்கவும, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முயற்சித்தல்-

பதினெட்டாவது

# பகிரங்க வீதியோட்ட
# - போட்டிகள் -
## மே மாதம் நடைபெறும்

கொழும்பு, ஏப் 23

பதினெட்டாவது பகிரங்க வீதியோட்டம் எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் இவ்வீதியோட்ட பந்தயத்தில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வீரர்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இருபது வயதுக்குக் குறைவான ஓட்ட வீரர்களுக்கும், 45 வயதுக்கு மேற்பட்ட வீரர்களுக்கும் பந்தயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அதேசமயம் பெண்களுக்காகவும் பந்தயங்கள் நடத்தப்படும்.

ஆயிரம் மீட்டர் தூர ஓட்டப்போட்டி சென்ட் தோமஸ் கல்லூரி விளையாட்டரங்கில் ஆரம்பமாகும். பம்பலப்பிட்டி பீட்டர்ஸ் கல்லூரிக்கு முன்னால் பெண்களுக்கும், வயதானவர்களுக்குமான ஓட்டப்பந்தயங்கள் ஆரம்பமாகும்.

எல்லா பந்தயங்களும் காலி முகத்திடலில் முடிவடையும். (த-032)

## புத்தாண்டுப் விளையாட்டங்கள்

கிண்ணியா, ஏப் 22

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவின், பிரதேச விளையாட்டுக் கழக சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த புத்தாண்டுப் போட்டி கடந்த 15-04-90 அன்று நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச எழிலரங்கு மைதானத்தில் இப்போட்டிகள் காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

அழகுராணி தெரிவு செய்தல், வழுக்கல் கம்பம் ஏறுதல், 2 நிமிடம் சிரிக்க வைத்தல், தோணி ஓட்டம், நீச்சல் போட்டி, தேங்காய் துருவுதல், கயிறு இழுத்தல், மோட்டார் (ஷாலி) சைக்கிள் மெதுவாக செலுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இவ்வைபவத்தில் சிறப்பாக இடம்பெற்றன.

இப்புத்தாண்டுப் போட்டியினை கிண்ணியா பொலீஸாரின் ஆதரவுடன் நடத்தப்பட்டது. (த-151)

## நான்கில் முதலிடம்

கட்டுகஸ்தோட்டை, ஏப் 22

இம்மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி பொலீஸ் மைதானத்தில் நடைபெற்ற கண்டி மாவட்ட கிராம சேவையாளர் பிரிவுகளுக்கிடையிலான கலை நிகழ்ச்சிப் போட்டிகளில் கண்டி கலைமகள் வித்தியாலயம் நான்கு நிகழ்ச்சிகளில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-139)

## புத்தாண்டு விழா

மஸ்கெலியா, ஏப் 22

புதுவருடப்பிறப்பு கடந்த 15-04-90 அன்று மஸ்கெலியா பொலீஸாராலும், பொது மக்களாலும் இணைந்து கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டம், தலையணைச் சண்டை, கிறீஸ் கம்பம் ஏறுதல், தேங்காய் துருவுதல், ஓட்டப்போட்டி போன்ற பல விளையாட்டுக்கள் இடம்பெற்றன. (த-408)

## வெற்றி

கிண்ணியா ஏப் 22

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய எழிலரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் "வள்ளுவன் இல்லம், இளங்கோ இல்லம் பாரதி இல்லம் ஆகிய மூன்று இல்லங்கள் பங்கு பற்றி முறையே முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றின.

வித்தியாலய அதிபர் திருகு கோணமலை தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் க தியாகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ-ரி)

# விஜய் அமிர்தராஜ் மீது நடவடிக்கை
## சர்வதேச டெனிஸ் சம்மேளனம் கண்டனம்

புளோரிடா, ஏப் 23

பிரபல இந்திய டெனிஸ் வீரர் அமிர்தராஜ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இந்திய டெனிஸ் சங்கம் தீர்மானித்திருப்பதை ஏ டி பி என்று அழைக்கப்படும் சர்வதேச டெனிஸ் சம்மேளனம் கண்டித்துள்ளது.

இந்திய டெனிஸ் சங்கத்தின் நடவடிக்கை தவறானது, சிறுபிள்ளைத்தனமானது. பழிவாங்கும் எண்ணம் கொண்டது என்று இச்சம்மேளனம் தான் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இச்சம்மேளனம் இந்தியாவில் ஆட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது. மேலும் பல சர்வதேச மட்ட ஆட்டங்கள் இந்தியாவில் நடத்தப்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் இந்திய டெனிஸ் சங்கம் விஜய் மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கத் துணிந்திருப்பது கண்டனத்துக்குரியது. இச்சங்கம் அமிர்தராஜுக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்க வேண்டும். அவர் ஆசிய மட்டத்தில் டெனிஸ் துறையையும், வர்த்தகத்துறையையும் அபிவிருத்தி செய்திருப்பதால் அவரை அச்சங்கம் பாராட்ட வேண்டும்.

இப்படி இச்சம்மேளனம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஏ டி பி என்ற டெனிஸ் சம்மேளனம் இரண்டாண்டுகளுக்கு முன்னரே உலகின் முன்னணி டெனிஸ் வீரர்களினால் உருவாக்கப்பட்டது. இதன் ஆட்டங்களுக்கான வீரர்களின் கவுன்சில் தலைவராகவும், பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் விஜய் அமிர்தராஜ் விளங்குகிறார். (த-037)

# விளையாட்டு பகுதி

## நோன்புப் பெருநாள் விளையாட்டு விழா

வெயாங்கொடை, ஏப் 22

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கஹட்டோவிட்ட மௌலானாபுரம் குடியேற்ற விளையாட்டரங்கில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டியொன்று இம்மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கஹட்டோவிட்ட நியூ ஸ்டார் கிரிக்கெட் கழகம் நடத்தும் பிரஸ்தாப விளையாட்டுப் போட்டியில் பல விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. (த-320)

## புத்தாண்டை முன்னிட்டு கலை, கலாசார விழா

கொழும்பு, ஏப் 23

அண்மையில் நடந்த புத்தாண்டை முன்னிட்டு ஏறாவூர்ப்பற்று உதவி அரசாங்க அதிபர் திரு கனகரத்தினம் தலைமையில் கலை கலாசார விழா நிகழ்ச்சிகள் செங்கலடி மெதடிஸ்த மகா வித்தியாலய மண்டபத்தில் வெகு கோலாகலமாக நடைபெற்றன.

போட்டிகளில் ஏராளமா்

## விளையாட்டு நிகழ்ச்சிகள்
### பொலீஸார் — மக்கள் இணைந்து ஏற்பாடு

சீனக்குடா, ஏப் 22

சீனக்குடா பொலீஸார் பிரதேச மக்களின் ஆதரவுடன் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்த வுள்ளனர்.

வெள்ளைமணல் பொது விளையாட்டு மைதானத்தில் இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறும். நீச்சல் போட்டி, வள்ளம் ஓட்டப் போட்டி ஆகியவை சீனக்குடா கிண்ணியா துறைகளில் நடத்தப்படும்.

அன்றைய விளையாட்டு நிகழ்ச்சிகளுடன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சிகளும் அன்று மாலை இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ஏக்கநாயக்கா தெரிவித்தார். (த-054)

## சாம்பியனாக தெரிவு

பதுளை, ஏப் 22

"சேபக் தக்ரோ" என அழைக்கப்படும் மலேசிய போட்டியில் சிவப்பு இல்லம், பச்சை இல்லத்தை தோற்கடித்து சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஊவா மலே சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி போட்டிகள் 16-4-90 அன்று பதுளை வை எம் எம் ஏ திடலில் இடம்பெற்றது. (த-032)




ஏப்ரல் 24 (செவ்வாய்க்கிழமை)

ஏப்ரல் 25 (புதன்கிழமை)




9-30 பேச்சு - "குறளும் சிலம்பும்" நிகழ்த்துபவர் என் தர்மராஜா

9-45 அகில இந்திய வானொலி நிலைய

9-20 பக்திப் பாடல்கள்

9-30 கலைப்பூங்கா

10-00 இசைக் கச்சேரி

10-45 பஜன்

## ஏப்ரல் 24 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0030 | சென்னை | யூ எல் | 122 |
| 0640 | மஸ்கட் | யூ எல் | 210 |
| 0700 | அபுதாபி | ஜீ எப் | 4144 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 1020 | திருச்சி | யூ எல் | 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ சி | 573 |
| 1210 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல்இசட் | 595 |
| 1330 | லண்டன் | இசட் பி | 630 |
| 1405 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1555 | மாலைதிவு | யூ எல் | 162 |
| 1755 | பமபாய், சென்னை | ஐ சி | 586 |
| 2050 | கராச்சி, மாலைதிவு | பி கே | 774 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2230 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |
| 2315 | சென்னை | யூ எல் | 122 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 131 |
| 0730 | திருச்சி | ஜீ எப் | 4145 |
| 0815 | அபுதாபி | ஈ கே | 800 |
| 0915 | டுபாய் | யூ எல் | 161 |
| 1115 | திருவனந்தபுரம | யூ எல் | 101 |
| 1200 | மாலைதிவு | ஐ சி | 573 |
| 1235 | சென்னை, பமபாய் | யூ எல் | 503 |
| 1315 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல்இசட் | 595 |
| 1430 | லண்டன் | இசட் பி | 630 |
| 1730 | றியாத் | யூ எல் | 271 |
| 1840 | பமபாய், சென்னை | ஐ சி | 586 |
| 1945 | சென்னை | யூ எல் | 121 |
| 2200 | கராச்சி, மாலைதிவு | பி கே | 774 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2330 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |
| | | யூ எல் | 182 |

## ஏப்ரல் 25 (புதன்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல், தஹ்ரான் கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்தா, தஹ்ரான், றியாத் | எஸ் வீ | 346 |
| 0845 | டுபாய், மாலைதீவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜீ | 307 |
| 1345 | மாலைதீவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1925 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0100 | அபுதாபி, பிராங்போர்ட், சிப்பல் | யூ எல் | 567 |
| 0125 | டுபாய், சூரிச், பாரிஸ் | யூ எல் | 523 |
| 0750 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 0915 | ஜித்தா, தஹ்ரான், றியாத் | எஸ் வீ | 346 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0950 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1215 | சென்னை | யூ எல் | 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1450 | மாலைதிவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1530 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1545 | சென்னை | யூ எல் | 122 |
| 1755 | பமபாய், கராச்சி | யூ எல் | 181 |
| 1905 | கராச்சி, தஹ்ரான், சிப்பல் | கே எல் | 802 |
| 2055 | குவைத் | யூ எல் | 227 |
| 2115 | புக்கியோதா, தொரிடா | யூ எல் | 456 |

குறிப்பு- யூ எல் — எயர் லங்கா. ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட். ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூடி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி —ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் —பிரத்தியேக சேவை. எல் டி — பிரத்தியேக சேவை. டி கே பிரத்தியேக சேவை கே எல் —ரோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம) (எ—ர)

போட்டிகளில் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாண விகளின் நடனம சித்தாண்டி, இளம் சைவ மாணவர் மன்றம வழங்கிய வில்லிசை நாட்டுப் பாடல்கள் "மனம திருந்திய தங்கை" நாடகமும, மற்றும "விதியின் போராட்டம" எனும நாடகமும இடம பெற்றன.

நிகழ்ச்சிகளின் இறுதியில் ஏறாவூர்பற்று உதவி அரசாங்க அதிபர் வந்தாறு மூலையைச் சேர் ந்த கவிஞர் மாசோமலிங்கத்தை பாராட்டி, பொன்னடை போர்த்தி வாழ்த்துமடலும வழங் கப்பட்டது. (எ—ரி)

## கரபந்தாட்ட சுற்று ஆட்டம்

மடவளை ஏப் 22

மடுல்கலை கிராம சேவ கர் பிரிவுக்குட்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கிடை யிலான கரபந்தாட்டப் போட்டியில் மடுல்கலை இராணுவ முகாம கரபந்தாட் டக் கோஷ்டி வெற்றி பெற் றது.

அண்மையில் மடுல்கலை யில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டி பன் விலை உதவி அரச அதிபரினால் பொலீஸ் - பொது மக்கள் நல்லு றவை வளர்க்கும முகமாக ஒழுங்கு செய்யப்பட்டு இருந் தது.

இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய மடுல்கலை இராணுவ முகாம அணி, மடுல்கலை சுப்பர் ஸ்போட்ஸ் கிளப்பை 3—2 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி ஈட்டியது.

(எ—ரி—431)

## வானொலி

### 24—4—1990

காலை —

- 5-00 நாதாஞ்சலி
- 5-05 தோத்திரமாலை - சிவ புராணம
- 5-30 பாமாலை - திருவாசகம
- 5-45 சைவ நற்சிந்தனை
- 5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
- 5-55 போதிமாதவனின் போத னைகள்
- 6-00 வர்த்தக சேவை
- 6-30 செய்திகள்
- 6-40 செய்தித்தாள்கள் கண் ணோட்டம
- 6-50 அறிவிப்புகள்
- 7-00 வர்த்தக சேவை
- 7-45 மாகாணச் செய்திகள்
- 7-50 வர்த்தக சேவை
- 8-00 வாத்தியவிருந்த
- 8-15 மெல்லிசைப் பாடல்கள்
- 8-30 மாதர் மஜ்லிஸ்
- 9-00 வர்த்தக சேவை

பகல் —

- 10-00 இசையமுதம
- 10-30 வாத்தியம - துரைசாமி ஐயங்கார் வீணை
- 11-00 இசைக்கச்சேரி - ஜி என் பாலசுப்பிரமணியம
- 12-00 வர்த்தகசேவை
- 12-45 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 வர்த்தகசேவை

மாலை —

- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 இப்தார் விசேட நிகழ்ச்சி
- 6-30 பக்திநெறி
- 6-45 நாட்டுப் பாடல்கள்
- 7-00 முஸ்லிம நிகழ்ச்சி
- 7-55 உலகச் செய்திகள்
- 8-00 விஞ்ஞானதீபம

இரவு —

- 8-30 "அங்கும இங்கும"- செய் திக்கூள்
- 8-50 மெல்லிசைப் பாடல்கள்
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்
- 9-20 பக்திப் பாடல்கள்

தர்மராஜா

- 9-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு (மெண்டலின்) ஸ்ரீனிவாசன்

### 25—4—1990

காலை —

- 5-00 நாதாஞ்சலி
- 5-05 தோத்திமாலை - ஒப்பிலியப்பன் சுப்பிரபாதம
- 5-30 பாமாலை ஆழ்வார்ப் பாடல்கள்
- 5-45 சைவநற்சிந்தனை
- 5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
- 5-55 போதிமாதவனின் போதனைகள்
- 6-00 வர்த்தக சேவை
- 6-30 செய்திகள்
- 6-40 செய்தித்தாள் கண் ணோட்டம
- 6-50 அறிவிப்புகள்
- 7-00 வர்த்தகசேவை
- 7-45 மாகாணச் செய்திகள்
- 7-50 வர்த்தக சேவை
- 8-00 வாத்தியம-துவாரம மங்கதாயரு - வயலின்
- 8-15 மெல்லிசைப் பாடல்கள்
- 8-30 மாதர் மஜ்லிஸ்
- 9-00 வர்த்தக சேவை
- 10-00 இசையமுதம
- 10-30 கிளாரினட் கே சி நடராஜன்
- 10-45 சிறுவர் பாடல்கள்
- 11-00 புல்லாங்குழல் ரி ஆர் மகாலிங்கம

பகல் —

- 12-00 வர்த்தக சேவை
- 12-45 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 வர்த்தக சேவை

மாலை —

- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 இப்தார் விசேட நிகழ்ச்சி
- 6-30 ஞானமுதம
- 6-45 மெல்லிசைப் பாடல்கள்
- 7-00 முஸ்லிம நிகழ்ச்சி
- 7-55 உலகச் செய்திகள்
- 8-00 களத்துமேடு
- 8-15 கதம்பம மன்ற கருநாடகங்கள்
- 8-45 மெல்லிசைப் பாடல்கள்
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்

- 10-00 இசைக் கச்சேரி
- 10-45 பஜன்
- 11-00 ஒலிபரப்பு முடிவு

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

- 9-00 ஹரி புதுமய்
- 9-15 சித்தி ஜய
- 9-40 லமா பிரசங்க
- 10-05 ரட்டின் தொட்டின்
- 10-20 டேட்லைன்
- 10-45 உதார
- 11-10 சோக் சேர்க்கிள்
- 11-35 ஒளிபரப்பு முடிவு
- 4-30 சொக்கர் ஸ்கூல்
- 5-00 செய்திகள் சிங்களம
- 5-15 சிறவர் களஞ்சியம
- 5-30 கண்டி வந்த
- 6-00 முழுமணிக்கு அஞ்சலி
- 6-19 ரமழான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி
- 6-30 செய்திகள் தமிழ்
- 7-00 கலை அரங்கம
- 7-30 விரைணச் சித்திரம
- 8-00 செய்திகள் சிங்களம
- 8-30 ஒஷின்
- 9-05 சாகரக் ரேக்கா
- 9-30 செய்திகள் ஆங்கிலம
- 10-00 டைனஸ்டி
- 10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

- 6-00 முழுமணிகளுக்கு அஞ்சலி
- 6-15 ... என் ஐ எஸ் படம
- 6-30 செய்திகள் சிங்களம
- 7-00 கீ சலமா
- 7-30 ...ான் கிளப்
- 8-00 ...வெல் கப்பிள்
- 8-30 இன்சேர்ச் அப் த பாஸ்
- 9-00 [illegible]
- 9-30 ரொக்போர்ட் பைல்ஸ்
- 10-00 செய்திகள் ஆங்கிலம
- 10-26 ரொக்போர்ட் பைல்ஸ் தொடர்ச்சி
- 10-45 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

## ராஜாங்க அமைச்சர்களுக்கு வரவேற்பு





முஸ்லிம சமய கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்-

மற்றைய படத்தில் ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம ஈ எச் மஃரூப், ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் யூ எல் எம பாருக், ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோரும பிரமுகர்களும அமர்ந்திருப்பதைக் காணலாம்-

[படம்- உபாலி ஜயரட்ன]

# 130 ஊராட்சி மின் பணி

# மின்சபையின் கீழ் வரும்

கொழுமபு, ஏப். 23

130 உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களில் மின் விநியோகம மின்சார சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும-

மின் விநியோகம புதிய மின் விநியோக நடவடிக்கைகளில் காணப்படும குறைபாடுகளைப் போக்கவே இந்த நடவடிக்கை இப்பணிகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்படும-

மின் விநியோகப் பணிகளை திறமபட மேற்கொள்வதற்காக உலக வங்கியின் உதவியுடன் திட்டம ஒன்றும நடைமுறைப்படுத்தப்படும- இதற்காக 100 கோடி ரூபா நிதி செலவிடப்படும-

ஏற்கனவே 36 உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் மின் விநியோகப் பணிகள் மின்சார சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன-

(ண-007)

# சமுதாய நலனை கருத்தில் கொண்டு

## செயலாற்ற வேண்டும்

### —இம்தியாஸ்

கொழுமபு, ஏப் 23

முஸ்லிம் சமூகம ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கும இக்கால கட்டத்தில் சமுதாய நலனைக் கருத்திற் கொண்டு நாம செயலாற்ற வேண்டியது அவசியம-

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்-

ராஜாங்க அமைச்சர்களாக புதிதாக நியமனம பெற்றுள்ள அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் அல்ஹாஜ் யூ எல் எம் பாருக் ஜனாப் எம ஈ எச் மஃரூப் ஆகியோருக்கு அகில இலங்கை முஸ்லிம லீக் வாலிப முன்னணி கடந்த 20-ஆம் திகதி முன்னணியின் தலைமையகத்தில் வரவேற்பு அளித்தது-

அங்கு வரவேற்புரை நிகழ்த்தகையிலேயே ராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாப் ரிஸ்வி சின்ன லெப்பை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய ஜனாப் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்-

முஸ்லிம சமூகத்தின் நல்லாசிகளை பெற்றுள்ள இந்த மூவரும தமது சிறந்த சேவையால் சிறப்படைய வேண்டும் என்று கூறினார்-

ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் பேசுகையில் —

புனித அல்அக்ஸாவை மீட்கும வரை எமக்கு நிமமதி இல்லை-

இப்புனித பூமி எம பொறுப்பில் வர நாம அல்லாஹ்விடம் "துஆ" கேட்க வேண்டும என்றார்-

ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் யூ எல் எம பாருக் பேசுகையில்-

எமமீது மக்கள் வைத்துள்ள நமபிக்கையை நாம திறமபட பாதுகாக்க வேண்டும என்றார்-

ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம ஈ எச் மஃரூப் பேசுகையில்-

ஜனாதிபதியின் செயற்பாடுகள் நாட்டுக்கு நன்மையை பெற்றுக் கொடுக்கும தலைவர்கள் [illegible] மையானவர்களாக இருக்க வேண்டும என்றார்-

முஸ்லிம லீக் வாலிப முன்னணி பொதுச் செயலாளர் அல்ஹாஜ் என் எம அமீன் பேசுகையில்-

"முஸ்லிம சமுதாய மேம்பாட்டுக்காக நாம குரல் கொடுக்க வேண்டும்" என்றார்-

"இப்தார்" நிகழ்ச்சியும நடைபெற்றது-

(வ-007)

# இஸ்லாம், முஸ்லிம்கள்

## என்ற ரீதியில் செயற்படுவோம்

### ராஜாங்க அமைச்சர் லைலத்துல் கத்ர் செய்தி

கொழுமபு, ஏப் 23

இயக்கம பிரிவு என்ற ரீதியில் செயல்படாத நாம அனைவரும "இஸ்லாம" முஸ்லிம்கள்" என்ற ரீதியில் செயல்பட வேண்டும-

முஸ்லிம சமய கலாசார, ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் நேற்று "லைலத்துல் கத்ர்" இரவை முன்னிட்டு விடுத்த விசேட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்-

அச் செய்தியில் அவர் மேலும குறிப்பிட்டு இருப்பதாவது-

லைலத்துல் கத்ர் என்றால் மகத்துவமிக்க இரவு என்று பொருள்-

புனித திருக்குர்ஆனில் 97 ஆவது அத்தியாயம இந்த இரவு பற்றியும அதன் மகத்துவம பற்றியும தெளிவாகக் கூறுகின்றது-

இந்த அத்தியாயம பின்வருமாறு கூறுகின்றது-

"நிச்சயமாக நாம இந்த குர்ஆனின் கண்ணியமிக்க லைலத்துல் கதிர் என்னும் இரவில் இறக்கி வைத்தோம-

(நபியே) அந்த கண்ணியமிக்க இரவின் மகிமையினை நீர் அறிவீரா?

கண்ணியமிக்க அந்த இரவு ஆயிரம மாதங்களை விட மிக்க மேலானதாகும-

அதில் மலக்குகளும (ஜிப்ரீலாகிய பரிசுத்த ஆவியும) தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர்-

சாந்தி சமாதானத்துடன் (அவ்விரவு) விடியற்காலை உதயமாகும வரையிலாகும-

இவ்விரவு ரமழான் மாதத்தில் எத்தினத்தில் வருகின்றது என திருக்குர்ஆனோ அல்லது நபி (ஸல்) அவர்களுடைய பொன் மொழிகளோ எதுவும குறிப்பிட்டுக் கூறவில்லை-

என்றாலும ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தின் ஒற்றைப் படையான நாட்களின் [illegible] களில் இருப்பதற்கான, ஹதீஸ் ஆதாரங்கள் இருக்கின்றன-

ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் உள்ள ஒற்றைப் படையான நாட்களில் நீங்கள் லைலத்துல் கதிர்என்னும இரவை தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள் என நாயகம (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்-

அநேகமான இமாமகளும, பெரியார்களும இவ்விரவு ரமழான் மாதத்தின் இருபத்தி ஏழாம இரவாக இருக்கலாம, என்ற கருத்தைக் கொண்டிருப்பதனால் அநேகமானோர் ரமழான் மாதத்தின் இருபத்தி ஏழாம இரவை லைலத்துல் கதிர் இரவாக அனுஷ்டிக்கும வழக்கத்தினைக் கொண்டுள்ளனர்-

உப்பாதா இப்னு சாமித் என்ற நாயகத் தோழர் பின்வருமாறு அறிவிக்கின்றார்-

ஒரு நாள் நாயகம (ஸல்) அவர்கள் லைலத்துல் இரவு எப்பொழுது என்பதை அறிவிப்பதற்காக வெளியே வந்தார்கள்-

அப்பொழுது இரு முஸ்லிமகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்- அதனைப் பார்த்த நாயகம (ஸல்) அவர்கள் நான் உங்களுக்கு லைலத்துல் கத்ர் இரவு எப்பொழுது என்பதை அறிவிப்பதற்காக வெளியே வந்தேன்-

அந்த இரு சகோதர முஸ்லிமகளும சண்டையிட்டுக் கொண்டிருந்ததன் காரணமாக அது மறைக்கப்பட்டு விட்டது என்று கூறினார்கள்.

லைலத்துல் கத்ர் பற்றிய இந்த ஹதீஸ் எமக்கு நல்ல படிப்பினையை அளிக்கின்றது-

அதாவது இரு சகோதர முஸ்லிமகளுக்கிடையே ஏற்படும பிரச்சனை பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதுதான் அது-

எனவே இயக்கம, பிரிவு என்ற ரீதியில் செயல்படாது நாம எல்லோரும இஸ்லாம முஸ்லிமகள் என்ற ரீதியில் செயல்பட வேண்டும-

[illegible] களை [illegible] பதிலாக இல்லாதொழிக்க முயற்சிக்க வேண்டும-

[illegible] ட்டத்தில் ஏதும சிறு சிறு பிரச்சினைகள் தோன்றுமபோது அவற்றைப் பள்ளிவாசல் மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும-

பள்ளிவாசல்களில் உயிர்துடிப்பும, உயிர் துடிப்பின்மையும அதன் நிர்வாகிகளிலேயே தங்கியிருக்கின்றது-

எனவே நல்ல நிர்வாகிகளைத் தெரிவு செய்த பள்ளிவாசலை உயிர்துடிப்புள்ளதாக மாற்ற





# அரசியல் லாபம்

# கிடைக்காதவர்கள்



நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த இராணுவ, பொலீஸ், கடற்படை, விமானப்படை வீரர்களை கௌரவிக்கும் வகையில் கடந்த ஞாயிறன்று விசேட புது வருட விழா கொண்டாடப்பட்டது.

தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் அமைந்துள்ள எஸ் எஸ் சமரசிங்க ஞாபகார்த்த மண்டபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு விருந்துபசாரம் ஒன்றும் நடத்தப்பட்டது.

குடும்பத்தவர்களும், உறவினர்களும் கட்டணமின்றி மிருக காட்சிசாலையை சுற்றிப் பார்ப்பதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

அப்போது விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யானை நடனத்தை அவர்கள் பார்த்து ரசிப்பதை முதலாவது படத்திலும், யானை நடனமாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ல-ய)



# கிடைக்காதவர்கள்

## அரசுக்கு எதிராக செயல்பட்டனர்

## கண்டி மாவட்ட எம். பி.

கண்டி, ஏப் 22

"அரசியலை அளவுக்கு அதிகமாக தொடர்புபடுத்திக் கொண்டதாலேயே இந்த நாட்டில் இளைஞர்களின் பிரச்சினைகள் தலைதூக்கின. அரசியல் லாபம் கிடைக்காதவர்கள் அரசுக்கு எதிராகச் செயல்பட வேண்டிய இக்கட்டான நிலை உருவானதும் இதனாலேயே.

இவ்வாறு கூறினார் கண்டி மாவட்ட எம் பி திரு ஹரேந்திரநாத் துனுவில.

கண்டி தென்னக்கும்புரை சிங்கள வித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்த கூட்டம் ஒன்றில் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:-

"இந்த நாட்டை ஆண்ட சகல ஆட்சியாளர்கள் மத்தியிலும் தவறுகள் பல இருந்தன. இதனால் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

அவர்கள் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டனர்.

அண்மையில் நடைபெற்ற வன்முறைகள் காரணமாக ஏற்பட்ட இழப்பு கோடிக்கணக்காகும். இதன் காரணமாக நாடு படிப்படியாக எழுச்சி பெற வேண்டியுள்ளது. வாழ்க்கைச் செலவு பெரும் அளவில் கூடிவிட்டது"

"காணி வழங்குவதிலும் சாதாரண நடைமுறைகளை அரசாங்கம் செயல்படுத்தும்.

இன்றைய ஜனாதிபதியின் ஆதர்ஷமான வேலைத் திட்டங்கள் பிரச்சினைகள் பலவற்றையும் தீர்க்க உதவும்.

இப் பகுதியில் நீர் விநியோகத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. 3,75,000 ரூபாவை நான் உதாகம திட்டத்துக்கும் ஒதுக்கியுள்ளேன்"

இப்படி அவர் மேலும் கூறினார். [ஐ-017]

யிருக்கின்றது.

எனவே நல்ல நிர்வாகிகளைத் தெரிவு செய்து பள்ளிவாசலை உயிர்துடிப்புள்ளதாக மாற்றுவது ஜமாஅத்தார்கள் அனைவரின் தம் கடமையாகும்.

பள்ளிவாசல்களில் உயிரோட்டமே சமூகத்தின் உயிரோட்டமாகும்.

தன் சமூக விடயத்தில் கவனம் செலுத்தாதவன் என்னைச் சேர்ந்தவன் அல்ல என்னும் நாயகம் (ஸல்) அவர்களது பொன்மொழி எம் அனைவரின் சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

இவ்வாறு அச்செய்தியில் குறிப்பிடப்பட்டு உள்ளது. (ல-007)

# பயிற்சி ஆசிரியர்களின் பணம் கொள்ளை

மஹவாஹெட்ட ஏப் 22

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்குத் தெரிவாகியுள்ள ஆசிரியர்களின் கண்டி மத்திய பயிற்சி நிலையமான க/கேராதனை தமிழ் வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை பயிற்சி ஆசிரியர்கள் பலரின் பெருந்தொகைப் பணம் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலையில் பயிற்சி ஆசிரியர்கள் ஒரு மண்டபத்திலிருந்து மற்றொரு மண்டபத்துக்கு கூட்டமொன்றுக்குச் சென்றனர். அப்போது மண்டபத்தில் பயிற்சி ஆசிரியைகளின் பணப்பைகளிலிருந்த பணமே கொள்ளைக்காரர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது.

மூடப்பட்டிருந்த மண்டபத்தின் ஜன்னலை உடைத்து உள்ளே சென்று கொள்ளையடித்தார்கள் என்று கூறப்படுகிறது.

(ல-099)

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலக்கம் தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 24 ஏப்ரல் 1990.

DINAPATHI 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O. Box 1613.

# ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோருக்கு சம்பள உயர்வு இல்லையா?

கொழும்பு, ஏப் 23

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் தொழில் புரியும் சகல ஊழியர்களுக்கும் 200 ரூபா பட்ஜட் சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லையாம்.

ஆனால் நிரந்தர ஊழியருக்கு மட்டும் இந்த 200 ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாம்.

ஆகவே இந்த 200 ரூபா சம்பள உயர்வை சகலருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் தொழில் புரியும் ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. [இ-007]

## பெருநாள் தொழுகை

கொழும்பு, ஏப் 23

ரமழான் பெருநாள் தொழுகை பெருநாள் தினத்தன்று கொள்ளுப்பிட்டி அல்பிஸ் பார்க்கில் காலை 7-30 மணிக்கு நடைபெறும்.

தஸ்ஹீத் ஜமாஅத் இத்தொழுகையை ஏற்பாடு செய்துள்ளது. (ல-007)

தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217 ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—84